# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 பங்குனி 17 செவ்வாய்க்கிழமை (30-03-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:125


# ஜே.வி.பியினரின் கைக்கூலிகளே ஆனந்தசங்கரியும் டக்ளஸும்!

## யாழ்.மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் சாடல்



யாழ்ப்பாணம்,மார்ச்30

ஜே.வி.பியினரின் கைக்கூலிகளே ஆனந்தசங்கரியும் டக்ளஸும்.

- இவ்வாறு சாடினார் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

யாழ் மாவட்ட அரசியல்துறை பணிமனையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே சி.இளம்பரிதி இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகள் இராணுவ பலத்துடன் மட்டுமல்ல, அரசியல் பலத்துடனும் உள்ளனர் என்பதைத் தேர்தல் மூலம் சர்வதேச சமூகத்திற்கு தமிழ்மக்கள் எடுத்துக்காட்டவிருக்கின்றனர். அத்துடன் விடுதலைப் புலிகள் ஒரு சிறுகுழுவல்ல. அது மக்கள் இயக்கம் என்பதையும் தேர்தல் மூலம் மக்கள் நிரூபிப்பர்.

விடுதலைப் புலிகளை ஆதரித்து நிற்கும் தமிழ்க் கூட்டமைப்பை தமிழ் மக்கள் வெற்றி பெறச்செய்வார்கள். அதன்மூலம் எமது நியாயமான போராட்டத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கும் நிலை ஏற்படும்.

துப்பாக்கிச் சன்னத்திற்கு ஒப்பான தமது ஒவ்வொரு வாக்கையும் எமது மக்கள் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் உரிமையாகப் பயன்படுத்துவர். எமது உரிமைகளை வென்றெடுக்கும் நாளாக ஏப்ரல் 2ஐப் பிரகடனப்படுத்தி தமிழ்க்கூட்டமைப்புக்கு வாக்களித்துத் தமது உரிமையை அவர்கள் வென்றெடுப்பர்.

**துரோகிகள்**

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் ஒரு சிறு பகுதியைக் கூட வென்றெடுக்கமுடியாத ஆனந்தசங்கரியும் டக்ளஸ் தேவானந்தாவும் தமிழ்மக்களின் துரோகிகளாவர். இவர்கள், தமிழ்மக்கள் உரிமையைப் பெற யாருடன் போராடுகிறார்களோ அவர்களின் கைக்கூலியாகச் செயற்படுகின்றனர்.

வடக்கில் தமது முன்னணியின் பிரதிநிதிகளாக டக்ளஸும் ஆனந்தசங்கரியும் செயற்படுகின்றனர் என்று ஜே.வி.பியின் செயலாளர் விமல் வீரவன்ஸ பகிரங்கமாகப் பேசிவருகின்றார்.

தமிழ்மக்களுக்கு அதிகாரப்பரவலாக்கலும் இல்லை, தாயகமும்

(02ஆம் பக்கம் பார்க்க)

### கூட்டமைப்புக்கு ஆதரவாக கிளிநொச்சியில் நேற்றுப் பிரசாரம்

கிளிநொச்சி,மார்ச்30

எதிர்வரும் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு கோரி கிளிநொச்சியில் நேற்று முழுநாளும் பிரசாரங்கள் இடம்பெற்றன.

கூட்டமைப்பு வேட்பாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் கூட்டமைப்புப் பிரமுகர்கள் அடங்கிய குழுவினர் இந்தப் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தும் சுவரொட்டிகளை ஒட்டியும் பிரசாரங்களை அவர்கள் மேற்கொண்டனர்.

கிளிநொச்சி நகரப் பகுதியில் மட்டுமல்லாது புறநகர்ப் பிரதேசங்களிலும் பிரசாரங்கள் இடம்பெற்றன.

இந்தப் பிரசாரங்களின்போது பெரும் எண்ணிக்கையில் மக்கள் கலந்துகொண்டனர். (ஒ-3)

## பொலீஸ் விசாரணைகளில் திருப்பம்

# மகேஸ்வரனைக் கொலை செய்வதற்கு முன்கூட்டியே கூட்டங்களில் ஒத்திகை!

## சுட்டவர் பற்றி நேரில் கண்டவர்கள் தகவல்

கொழும்பு,மார்ச்30

**கொழும்பில் மிகக் குறுகிய காலத்தில் மக்களின் பேரபிமானத்தைப் பெற்று தேர்தலில் வெற்றி விளிம்பில் நிற்கும் முன்னாள் அமைச்சர் தி.மகேஸ்வரனைக் கொலை செய்வதற்கு முன்கூட்டியே பல கூட்டங்களில் ஒத்திகை நடைபெற்றிருக்கிறது. தீவிர விசாரணைகளில் ஈடுபட்டு வரும் பொலீஸாருக்கு இந்தத் திடுக்கிடும் தகவல் கிடைத்திருக்கிறது.**

கொழும்பு ஜிந்துப்பிட்டியில் வைத்து கடந்த சனிக்கிழமை இரவு மகேஸ்வரன் சுடப்பட்டதை நேரில் கண்டவர்கள் பலர் பொலீஸாருக்கு முக்கியமான தகவல்களைத் தெரிவித்திருக்கிறார்கள். சுட்டவர் இனி எந்த நேரத்திலும் கைதுசெய்யப்படலாம் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக, சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று அவருடன் இருந்த ஆதரவாளர்களிடமும் வாக்குமூலங்கள் பெறப்பட்டு வருகின்றன. இத்தகவல்களை கொழும்பு வடக்குப் பகுதி குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரியான பொலீஸ் அதிபர் எஸ்பி. லூகொட கூறினார்.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றபோது அதை நேரில் கண்ட சாட்சிகள் எனக் கருதப்படும் இருபதுக்கும் மேற்பட்டவர்களிடம் இதுவரை வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன. துப்பாக்கிதாரியை நேரில் கண்ட நபர்கள் வழங்கியுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் மேலும் முடுக்கிவிடப்

(20ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்புப் பிரசாரக் கூட்டம் நல்லூர் ஆலய முன்றிலில் இன்று

யாழ்ப்பாணம்,மார்ச்30

யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ்க் கூட்டமைப்பின் மாபெரும் பிரசாரக்கூட்டம் இன்று மாலை 6மணி முதல் நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் இடம்பெறவுள்ளது.

கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் வேட்பாளரான அ.குமாரவேல் தலைமையில் இடம்பெறும் இந்தப் பிரசாரக் கூட்டத்தில் கூட்டமைப்பு வேட்பாளர்கள், விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் உரையாற்றவிருக்கின்றனர்.

சிறப்பு நிகழ்வாக தமிழீழ இசைக் குழுவின் 'இசை முழக்கம்' நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது.

குடாநாட்டில் சகல பகுதிகளிலும் இருந்தும் பெரும் எண்ணிக்கையானவர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு தமது உணர்வுபூர்வமான ஆதரவை வெளியிடுவர் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஒ-3)



மகேஸ்வரனிடம் உடல்நலம் விசாரிக்கிறார் பிரதமர் ரணில்.

# வாக்காளர் அட்டை கிடைக்காவிடில் தபாலகம் சென்று உடனே பெறுங்கள்

## தெரிவத்தாட்சி அலுவலர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,மார்ச்30

வாக்காளர் அட்டைகள் இதுவரை கிடைக்கப்பெறாத வாக்காளர்கள் கடைசிநேர நெருக்கடியைத் தவிர்க்க உடனடியாகத் த்தமது பிரிவுத் தபால் விநியோக அலுவலகத்துக்குச் சென்று அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தலை 'யாழ்.தேர்தல் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் யாழ். அரச அதிபருமான செ. பத்மநாதன் விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது:-

கணிசமான அளவு வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படாமல் தபால் நிலையங்களில் உள்ளன.

(20ஆம் பக்கம் பார்க்க)

# அரச தொலைக்காட்சி, வானொலியை கட்டுப்படுத்த அதிகாரி ஒருவர் நியமனம்!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி தொலைக் காட்சிச் சேவை, ஐ.ரி.என். தொலைக்காட்சி சேவை ஆகியவற்றைக் கண்காணித்து வழிநடத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரைத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸா நாயக்க நியமித்திருக்கிறார்.

தேர்தல் சமயத்தில் அரச ஊடகங்கள் ஜனாதிபதிக்கும் அவரது கட்சியினருக்கும் சார்பான பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கின்றன என்ற குற்றச்சாட்டு பரவலாக எழுந்துள்ள இச்சமயத்திலே இந்த நடவடிக்கையை தேர்தல் ஆணையாளர் மேற்கொண்டிருக்கிறார். (20ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானத்துக்கான யுத்தம் வலிந்து திணிக்கப்பட்ட ஒன்று

## கடந்தகாலத்துக்கு விளக்கம் தருகிறார் ஜனாதிபதி

கொழும்பு,மார்ச்30

விடுதலைப் புலிகளுக்கு எதிராக தாம் 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற பெயரில் மேற்கொண்ட பிரசாரம் தம் மீது வலிந்து திணிக்கப்பட்ட ஒன்று என ஜனாதிபதி கூறியுள்ளார்.

தமிழ் மக்களுக்கு நேற்று வரைந்த பகிரங்கக் கடிதத்திலேயே அவர் இந்த விளக்கத்தை அளித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளதாவது:-

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண எமது கட்சியுடன் கூட்டுச்சேர்ந்துள்ள ஜே.வி.பி. உட்பட ஏனைய கட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

இதேவேளை, தமிழ் மக்களுக்காக தனி நாடு கோருவதை நான் முழுமையாக நிராகரிக்கிறேன் பல்லின மக்கள் வாழ்வதால் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றமுடியாது உள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்துகொண்டதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் சமாதானத்தை ஏற்படுத்தமாட்டா.

யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச்செல்லவும் அபிவிருத்தப் பணிகளை மேற்கொள்ளவும் நான் அர்ப்பணிப்புடன் செயற்படப் போகிறேன் என்று ஜனாதிபதி தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.




சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தமிழர் தாயகத்தில் தமிழினம்
தன்னைத்தானே ஆள - களம் பல கண்ட - சிங்களச் சிறையில்
சித்திரவதைப்பட்ட தமிழினத்தின் விடிவுக்கு தியாகங்கள் பல புரிந்த தமிழ்மகன்

மாவை சோ.சேனாதிராசா அவர்களே!

எங்கள் தெரிவு இலக்கம் : 12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதன்மைவேட்பாளர் அமோக வெற்றி பெற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேர்தல் சின்னமாகிய வீட்டிற்கும் அவரின் தெரிவு இலக்கமாகிய 12 இற்கும் புள்ளடி இடுவோம்.



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

X 12

# ஐக்கிய வியாபாரச் சங்கக் காணியை குத்தகைக்கு வழங்க ஆட்சேபனை

## நிர்வாக சபைக்கு அங்கத்தவர் கடிதம்

தெல்லிப்பழை,மார்ச்30

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கத்திற்குச் சொந்தமான காணியை நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் கொழும்பு நிறுவனமொன்றுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டதை எதிர்த்து அதன் நிர்வாக சபைக்கு அங்கத்தவர்கள் 13பேர் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம் பல வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வந்த ஒரு நிறுவனமாகும். இடையில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்கள் உட்பட பல்வேறு தளர்வுகளால் ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் செயற்பாடுகள் முடங்கிவிட்டன. இதனால், அதன் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகள் சீராக வழங்கப்படவில்லை தற்போது அந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக சங்கத்தின் யாழ். வைத்திய சாலைக்கு முன்பாக உள்ள காணியை நீண்டகால அடிப்படையில் கொழும்பு நிறுவனம் ஒன்றிற்கு குத்தகைக்குக் கொடுக்க நிர்வாக சபை தீர்மானமியற்றியுள்ளதாக அறிகிறோம். அந்தத் தர்மானத்தை நாம் ஆட்சேபிக்கிறோம்.

மேற்படி காணியில் ஐக்கிய வியாபாரச் சங்கத்துக்குச் சொந்தமான எரிபொருள் விற்பனை நிலையமொன்று உள்ளது. அதனைப் புனரமைத்து இயக்கினாலே பெருமளவு சிக்கல்களைத் தீர்க்க முடியும். இந்நிலையில் குறுகிய கால குத்தகை அடிப்படையில் கூட அல்லது நீண்டகாலக் குத்தகையில் பலகோடி ரூபா பெறுமதியான காணியை வேறு ஒரு நிறுவனத்துக்கு வழங்குவது பொருத்தமற்றது என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-150)

# மட்டுநகரில் தேநீர் கடைக்காரர் ஒருவர் கொத்தியும் வெட்டியும் கோரக் கொலை!

மட்டக்களப்பு,மார்ச்30

மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் தேநீர்க்கடை வைத்து வியாபாரம் செய்துவந்த குடும்பஸ்தர் ஒருவர் கொத்தியும் வெட்டியும் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொலைசெய்யப்பட்டவர் மட்டக்களப்பு மின்சாரநிலைய வீதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கணேசன் (48) என பொலீஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 5 மணியளவில் நடைபெற்றுள்ளது.

காலை வேளை கடைதிறப்பதற்காக வீட்டிலிருந்து கடைக்குவந்து கடையைத் திறந்தபோது பின்தொடர்ந்த நபர்கள் இவரை வெட்டிக்கொலை செய்திருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் எம்.எச்.எம்.அக்மீர், பதில் நீதிவான் சட்டத்தரணி கே.தங்கவடிவேலை விசாரணைகளை மேற்கொள்ளுமாறும், மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் சட்ட வைத்திய அதிகாரியை பிரேத பரிசோதனை செய்யுமாறும் பணித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மட்டக்களப்பில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

(க)

# ஜே.வி.பியினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை என்று கூறிவரும் வீரவன்ஸவுக்கு 'ஆமாம்'போடும் டக்ளஸ்'ம் சங்கரியும் தமிழ் மக்களிடம் எப்படி வாக்குக் கேட்கமுடியும்.

**விலைக்கு வாங்கமுடியாது**

சாராயமும், தையல் மெஷினும் வழங்கி எமது மக்களை விலைபேச அவர்கள் இங்கு வந்துள்ளனர். சங்கரியார் தாராளமாக சாரயப் போத்தல் விநியோகிக்கிறார். டக்ளஸ் தையல் மெஷின் தருவதாக உறுதி கூறுகின்றார்.

வடுதலை இல்லையேல் வாழ்க்கை இல்லை என்ற தளராத நோக்கம் கொண்ட வீரமறவர்களான தமிழர்களை விலைக்கு வாங்கமுடியாது என்ற பாடத்தை மக்கள் அவர்களுக்கு புகட்டுவர்.

இராணுவத்தின் படைப்பிரிவில் பணியாற்றி மாதாந்தம் ரூபா 7 ஆயிரம் முதல் ரூபா 15 ஆயிரம்வரை சம்பளம் பெற்றுவரும் ஈ.பி.டி.பியின் பணியாளர்களே தேர்தல் பணிகளில் ஈடுபட்டுவருகின்றனர். இதைவிட டக்ளஸ் அமைச்சராக இருந்தபோது அவருக்கு அரசு வழங்கிய 200 கோடி ரூபா உதவியில் 85 கோடி ரூபாவுக்கு இன்னமும் கணக்குக் காட்டப்படவில்லை என்று ஒரு தகவல். இது பற்றி ஆராய்ந்து அதைப்பற்றி விசாரிக்க முயற்சித்த போது, அரசுத்தரப்பு அந்தவிசாரணையை முடக்கிவிட்டதாகக் கூறப்படுகின்றது.

கடந்த தேர்தலில் தங்களுக்குத்தாங்களே கள்ளவாக்குகளைப் போட்ட ஈ.பி.டி.பியினர் இம்முறை ஒரு வாக்குச்சீட்டை நூறு ரூபாவுக்கு மக்களிடம் வாங்கிவருகின்றனர். கிளிநொச்சியில் மரணித்த வாக்காளருக்குத் தபால் மூலம் பண நோட்டுக்களை அனுப்புகிறார் சங்கரியார்.

ஜனநாயகம், சுதந்திரம் என்று பேசிவந்த இவர்கள் இப்போது அவற்றுக்கு மாறாகச் செயற்படுகின்றனர். மாற்றுக்கருத்துக்கு புலிகள் மதிப்பு அளிப்பதில்லை என்று கூறிவந்தனர். இன்று மாற்றுக்கருத்துக்கு மதிப்பளிப்பவர்கள் புலிகள்தான் என்பதை உணர்ந்திருப்பார்கள்.

நீதியான, நியாயமான தேர்தலாக அமைவதன் மூலம் மக்கள் தமது அபிலாஷைகளை. உரிமைகளை சர்வதேசத்திற்கும், தெற்குக்கும் தெரியப்படுத்த வாய்ப்புக்கிட்டும் என எமது தலைமை நம்புகின்றது. இதன்காரணமாக வன்முறைகள் அற்ற அமைதியான தேர்தல் களம் அமையவேண்டும் என்று எமது தலைமை விரும்புகின்றது.

**களங்கம் விளைவிக்க முயற்சி**

சிங்களப் பேரினவாதத்தின் எடுபிடிகளாகவும் அடியாள்களாகவும் இங்கு வலம்வரும் சக்திகள் வேண்டுமென்றே மக்களைச் சீண்டி வன்முறைக் களங்களைத் திறந்து விடுதலைப் புலிகளுக்கும் மக்களுக்கும் சர்வதேச மட்டத்தில் களங்கம் விளைவிக்க முயல்கின்றன.

பாதுகாப்புப் படையின் பந்தோபஸ்துடன் உலாவரும் இவர்கள் தமக்குப் பாதுகாப்பு இல்லை என்று நீலிக்கண்ணீர் வடிக்கின்றார்கள். ஆயுதங்கள் அற்ற விடுதலைப் புலிகளும் மக்களும் எப்படி அச்சுறுத்தல் விடமுடியும்? ஆனால் மக்கள் எழுச்சி அலையே எங்கும் காணப்படுகின்றது. இது அவர்களின் சுதந்திர உணர்ச்சி வெளிப்பாடாகும். எனவே மக்கள் அமைதிகாத்து இத்தகையவர்களின் சீண்டல்களுக்கு இடம் கொடுக்காது வன்முறையற்ற தேர்தலுக்கு தயாராகும்படி வேண்டுகின்றோம்.

புலிகளிடம் இராணுவ பலம் உள்ளது என்பது உலகறிந்த உண்மை. யாழ். மாவட்டத்தில் எந்த ஆயுதமும் இன்றி மக்கள் பலத்துடன் புலிகள் நிற்கின்றனர். ஆயுதத்தாலோ, வார்த்தையாலோ, செயல் ரீதியாகவோ எந்தவித அச்சுறுத்தலையும் நாம் விடவில்லை; அச்சுறுத்தப்போவதும் இல்லை.

மக்கள் தமது வாக்குகள் மூலம் இந்தத் துரோகிகளை நிராகரித்து விடுவார்கள். அதற்கு தேர்தல் ஒரு வாய்ப்பாக அமைந்துவிட்டது.

வன்னியில் உள்ள வாக்காளர்கள் வாக்களிக்க மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகளை ஜனாதிபதி சந்திரிகா மூலம் தடுக்கப்போவதாக சங்கரியாரும் டக்ளஸ்'ம் செய்தி பரப்பி உள்ளனர். அதன்மூலம் அந்தப்பகுதி மக்களை அச்சுறுத்தியுள்ளனர். இது உண்மையில் ஜனநாயகத்துக்கு விரோதமான செயலாகும். இது பற்றி தேர்தல் கண்காணிப்புக் குழுவினரிடம் முறையிடவுள்ளோம்.

எமது யாழ். மாவட்ட மக்கள் எதிர்வரும் 2ஆம் திகதி தேர் தலில் ஒன்பது கூட்டமைப்பினரை வெற்றி பெறச்செய்வதுடன் நிறைவான வாக்களிப்பின் மூலம் தேசிய பட்டியலில் உறுப்பினரையும் தெரிவுசெய்யவேண்டும்.

விடுதலைக்காக சுதந்திரத்துக்காக வரலாறு தந்த சந்தர்ப்பத்தை சரியாகப்பயன்படுத்தி வெற்றியை நிலைநாட்ட வேண்டும். - என்றார் இளம்பரிதி.

(ஒ-3)

# மாணவி மீது பாலியல் துஷ்பிரயோக முயற்சி; பாடசாலைச் சமூகம் நேற்றுக் கண்டனப்பேரணி

ஊர்காவற்றுறை,மார்ச்30

ஊர்காவற்றுறையில் கடந்த சனிக்கிழமை 12 வயதான பாடசாலை மாணவியொருவர் மீது இடம்பெற்றதாகக் கூறப்படும் பாலியல் துஷ்பிரயோகச் சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து சம்பந்தப்பட்ட மாணவி கல்விகற்றுவரும் ஊர்காவற்றுறை சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயச் சமூகத்தினர் நேற்று கண்டனப் பேரணி ஒன்றை நடத்தினர்.

இந்தக் கண்டனப் பேரணி நேற்றுக்காலை 11 மணியளவில் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயத்தில் இருந்து ஆரம்பமாகிச் சுருவில் வீதி ஊர்காவற்றுறைச் சந்தியூடாக ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்துக்குச் சென்றடைந்து.

அங்கு மேற்படி பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி செபமாலை தயாநாயகி ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.செல்வநாயகத்திடம் மகஜர் ஒன்றை கையளித்தார். அத்துடன் மனித உரிமைகள் ஆணைக்குழு, சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றிற்கான மகஜர்களை உதவி அரச அதிபரிடம் அவர் கையளித்தார். இதனையடுத்து உதவி அரச அதிபர் சம்பந்தப்பட்டவர்களிடம் தொடர்புகொண்டு விரைவில் உரிய நடவடிக்கை எடுப்பார் என்று உறுதியளித்தார்.

இந்தக் கண்டனப் பேரணிக்கு ஆதரவு தெரிவித்து கரம்பன் சண்முநாதன் மகா வித்தியாலயம், ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் பாடசாலை, ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரி, நாரந்தனை றோ.க.த. கலவன் பாடசாலை ஆகியவற்றின் மாணவ, மாணவியரும் பேரணியில் கலந்துகொண்டனர். இவர்களுடன் பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்கள் என நூற்றுக்கணக்கானோரும் பங்குபற்றினர். பேரணியில் சென்றவர்கள் "மாணவர்களின் சுதந்திரத்தைப்பறிக்காதே", "அன்று பல்கலைக்கழக மாணவர்களைச் சீண்டினாய், இன்று எம்மைச்சீண்டுகிறாய்," வேலியே பயிரை மேயாதே" அநீதிக்கு எதிராகக் குரல் கொடுப்போம் என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகள் தாங்கிச்சென்றனர்.

பேரணியின் இறுதியில் இது தொடர்பாக பாடசாலை அதிபர் செபமாலை தயாநாயகி கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:- இப்பேரணிக்கு எந்தவித அரசியல் தொடர்பும் கிடையாது. இதைச் சிலர் அரசியலாக்க முயல்கின்றனர். எமது பாடசாலை மாணவிகளின் எதிர்காலப் பாதுகாப்பை வேண்டியும், நடைபெற்ற சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தே நாங்கள் இப்பேரணியை நடத்தியுள்ளோம்.

இதன்மூலம் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் நடக்கக்கூடாது என்று எதிர்பார்க்கின்றோம் இதற்குச் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் இருந்து உத்தரவாதம் வழங்கப்படவேண்டும். வீட்டிற்கும் பாடசாலைக்கும் இடைப்பட்ட பகுதியல் மாணவிகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. இந்தப் பாடசாலைக்கு நீண்ட தூரத்தில் இருந்து மாணவிகள் வந்து செல்கின்றனர். எனவே ஒட்டுமொத்த சமூகத்தினரிடமிருந்தும் மாணவிகளின் பாதுகாப்பை வேண்டிநிற்கின்றோம் என்றார்.

ஊர்காவற்றுறைப் பொலீஸ் நிலையம், தீவக மாணவர் பேரவை, ஈ.பி.டி.பி. கட்சியின் ஊர்காவற்றுறை அலுவலகம், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊர்காவற்றுறை அலுவலகம், மனித முன்னேற்ற நிலையம் ஆகியவற்றிற்கும் மேற்படி பாடசாலைச் சமூகத்தினர் மகஜர் அனுப்பியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மதியம் பாடசாலையிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த சிறுமியை வழிமறித்த நபர், அவரை அருகிலிருந்த பற்றைக்குள் இழுத்துச்சென்று துஷ்பிரயோகம் செய்யமுயன்றதுடன் சிறுமியின் காதணிகளையும் அபகரித்தார் என்று ஊர்காவற்றுறைப் பொலீஸாரிடம் முறையிடப்பட்டதும். இந்தச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட நபர் ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்தவர் என்று விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர் என்பதும் தெரிந்தவையே.

(ஒ-16)

## ஹொக்கி

யாழ்ப்பாணம்,மார்ச்30

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை மாவட்ட ரீதியாக நடத்தும் ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்கிழமை பிற்பகல் 4.30 மணிமுதல் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் காலிறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

பிற்பகல் 4.30 மணி - யாழ். பல்கலைக்கழக கோல்ட்ஸ் அணி எதிர் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞானப் பிரிவு பி அணி

மாலை 5.15 மணி - வடமராட்சி வி.க அணி எதிர் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞானப் பிரிவு ஏ.அணி

(ஒ-5)

## நாய்களுக்குத் தடுப்பூசி

வலிகாமம்தெற்கு,மார்ச்30

இன்று செவ்வாய்க்கிழமை சுன்னாகம் பகுதியில் வளர்பு நாய்களுக்குக்கான விசர் நோய்த் தடுப்பூசி போடப்பட உள்ளதாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.ஜெய்சங்கர் அறிவித்துள்ளார்.

விசர்நோய்த் தடுப்பூசி போடப்பட உள்ள இடங்களும் நேரமும் வருமாறு:-

★ காலை 9.30 மணி - உடுவில் நாகம்மாள் கோவில் வீதியில் உள்ள நினைவொளி சனசமூக நிலையம்.

★ காலை 10.30 மணி - உடுவில் உதயசூரியன் வீதியில் உள்ள உதயசூரியன் சனசமூக நிலையம்

(ஒ-152)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்30

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவிற்கான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ் செல்வநாயகம் தலைமையில் உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச மட்டத் திணைக்களத் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வர்.

## தூண்டி காலாண்டிதழ் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்30

தூண்டி காலாண்டிதழின் அறிமுக நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகப் பொருளியல் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கு.லக்ஸ்மணன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அ.யேசுராசா சிற்றிதழ்கள் பற்றி சிறப்புரை நிகழ்த்துவார். அறிமுகவுரைகளை ந.சத்தியபாலன், இ.இராஜேஸ்கண்ணன ஆகியோரும் பதிலுரையை தி. செல்வமனோகரனும் வழங்குவர்.

(எ)

# புலிகளுக்கு எதிராகப் பெற்றோர் முறைப்பாடாம்

## ஈ.பி.டி.பி. கூறுகிறது

விடுதலைப் புலிகளுக்கு எதிராக பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் ஊர்காவற்றுறைப் பெலீஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளனர் என்று ஈ.பி.டி.பி. தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சி நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்குச் சார்பான தேர்தல் பிரசாரப் பணிகளுக்குப் புலிகள் பாடசாலை மாணவர்களைப் பலவந்தமாக அழைத்துச் சென்றமை தொடர்பாக சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட பெற்றோர் ஊர்காவற்றுறைப் பொலீஸாரிடம் நேற்று முறைப்பாடு செய்துள்ளனர். ஊர்காவற்றுறைப் பொலீஸ் நிலையத்தில் செய்யப்பட்ட இம்முறைப்பாட்டில் ஊர்காவற்றுறைப் பிரசேத்திலுள்ள கரம்பன் சிறிய புஷ்பம் மகளிர் வித்தியாலயம் மற்றும் சென். மேரீஸ் வித்தியாலயம் ஆகியவற்றில் பயிலும் மாணவர் மாணவிகளைத் தேர்தல் பிரசாரப் பணிக்காக புலிகள் பலவந்தமாக அழைத்துச்சென்றனர் என்பதை அறிந்த பெற்றோர் அதிபர், ஆசிரியர்களிடம் தமது விரும்பமின்மையை வெளிப்படுத்தியதோடு பொலீஸ் நிலையத்திற்கும் சென்று முறைப்பாடு செய்துள்ளனர். இது தொடர்பாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் அமைப்பு போன்றவைவற்றிக்கும் தகவல்கள் வழங்கப்பட்டன. என்றுள்ளது.

(ஓ)

# வீதி விபத்தில் இளைஞர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்,மார்ச்30

லாண்ட்மாஸ்ரர் - இரு மோட்டார் சைக்கிள்கள் சம்பந்தப்பட்ட விபத்தில் சிக்கி ஒரு மோட்டார் சைக்கிளைச் செலுத்திச்சென்றவரான இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

நல்லூர் பிரதேச செயலகத்துக்கு முன்பாக, யாழ். பலாலி வீதியில் நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

பண்ணாகத்தைச் சேர்ந்த பரமேஸ்வரன் ஜெயகணேஷ் (வயது 23) என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவராவார். மோட்டார் சைக்கிளில் நல்லூர் பிரதேச செயலகத்துக்குச் சென்ற நபரொருவருக்கு மற்றொரு மோட்டார் சைக்கிளில் சென்ற மேற்படி இளைஞர் வழிவிட்டுக் கொடுக்க முனைந்தார் என்றும்.

அப்போது எதிரே வந்த 'லாண்ட் மாஸ்ரர்' வாகனத்துடன் அவர் மோதுண்டார் என்றும் கூறப்படுகிறது.

விபத்தில் தலையிலும், காலிலும் படுகாயமடைந்த அந்த இளைஞர், யாழ்.ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்படும் வழியில் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சடலம் பிரேத பரிசோதனையின் நிமித்தம் யாழ். ஆஸ்பத்திரியின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(ஒ-எ-15-139)

### ஐரோப்பிய ஒன்றியத்தின்

# தேர்தல் கண்காணிப்பாளர் நேற்று திருமலை விஜயம்

திருகோணமலை,மார்ச்30

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜோன் குஷ்னகன், இலங்கைக்கான ஆணையாளர் வோட்டர் வில்டன் மற்றும் ஊடக ஆய்வாளர் ணேவனாமயோலா ஆகியோர் நேற்று திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

மாவட்ட அரச அதிபரும் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியுமான காமினி ரொட்ரிகோவை மாவட்ட தேர்தல் செயலகத்தில் அவர்கள் சந்தித்துத் தேர்தல் முன்னேற்பாடுகள் தொடர்பாக உரையாடினர்.

இதனையடுத்து மாவட்ட செயலகத்தில் தேர்தல் கண்காணிப்புக்குழு தலைவர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆறு கண்காணிப்பாளர்கள் திருகோணமலை மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்புப் பணியை மேற்கொள்ளவுள்ளனர் என்றும் -

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களைத் தாக்க முனைவதும் கொலை முயற்சி மற்றும் கொலைச் சம்பவங்களில் ஈடுபடுவதும் ஜனநாயகத்திற்கு விரோதமான செயலாகும் என்றும் அவர் அப்போது தெரிவித்தார்.

தேர்தல் கண்காணிப்புக் குழுத் தலைவர், மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் மற்றும் அரசியல் பிரமுகர்கள் ஆகியோரையும் சந்தித்தார்.


(ஒ-187)

# 02.04.2004 தேர்தல் மூலம்

# வாழும் காலத்தில் ஒரு வரலாறு சமைக்க

## ஈழத்தமிழினமே!

## உன்னாலும் முடியும்.



சுரேஸ் பிரேமச்சந்திரன்

1



பத்மினி சிதம்பரநாதன்

7

இரத்தத்தால் எழுதும் வரலாறு
இனி இல்லையெனச் சொல்லவும்

அகதிவாழ்வையும், அவலவாழ்வையும்
அழித்து புதிய வாழ்வொன்று எழுதவும்
.......
பேச்சுவார்த்தை மூலம்
ஒரு நிரந்தரத் தீர்வுக்குவர
சிங்களஅரசுகளுக்கு அழுத்தம் கொடுக்கவும்
செம்மணிப் புதைகுழிகள் போல்
எம் மண்ணில்
இனி இல்லையெனச் சொல்லவும்


மண்ணின்விடுதலையும், பெண்ணின்விடுதலையும்
எம் கண்ணின் ஒளியெனச் சொல்லவும்

புலிகளின் தலைமையில் திரண்டு
தமிழினம் தன் உரிமைகளை மீட்டெடுக்கவும்



ஸ்ரீகாந்தா

2



சிவமகாராஜா

8



சிவாஜிலிங்கம்

3



சி.வீ.கே.சிவஞானம்

9

ஒன்றுதிரண்டு நிற்கும் தமிழ்த்தேசியத்தின் அடையாளமான
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் சின்னமான
வீட்டுக்கு நேரே புள்ளடியிட்டும், இவர்களில் எவருக்கேனும்
உங்கள் விருப்புவாக்குகளை இட்டும் வெல்லச்செய்வீர்.



சிவநேசன்

4



கஜேந்திரன்

10



கஜேந்திரகுமார்

5



கு.சிறீஸ்

11

ஏகப்பிரதிநிதிகளின் தாகமே எமது தாகமும்!
போராடும் புலிகளின் வழியே எமது வழியும்!!



ரவிராஜ்

6

நீடித்த அமைதியும் நிரந்தரத் தீர்வும் கிட்ட
உழைப்போமென உறுதியளிக்கிறோம்




[illegible]ராஜா

12

பிரசார வெளியீட்டு வாரியம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்



தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளான

**தன்மானம்**

**தன்னாட்சி**

**தமிழர் தாயகம்**

**சுயநிர்ணய உரிமை**

ஆகிய கோட்பாடுகளை முன்வைத்து நாடாளுமன்றம் சென்று குரல் கொடுத்திட......

# சீ. வீ. கே. சிவஞானம்

(முன்னாள் யாழ். மாநகரசபை ஆணையாளரும் விசேட ஆணையாளரும்)

## அவரை ஆதரித்து அமோக வெற்றிபெறச் செய்வோம்

**இலங்கைத் தமிழரசுக் கட்சி** X 9

- நல்லூர் பிரதேச மக்கள்.

---

## பேரன்புமிக்க தமிழ்த் தேசிய வாக்காளப் பெருமக்களே!

பேரன்புமிக்க யாழ். மாவட்ட வாக்காளப் பெருமக்களே!



(சிங்கத்தின் குகையில் அரசோச்சிய வீரத்தமிழர்களின் குரல் மாமனிதர் குமார் பொன்னம்பலம்)

தந்தை வழியில் மைந்தன்

வெற்றிச் சின்னம் வீடு

இலக்கம் 5



தந்தையின் வழியில் மைந்தன்

ஜீ.ஜீ.பொன்னம்பலம் (கஜேந்திரகுமார் பொன்னம்பலம்)

*2001 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்த பின் திரு பழநெடுமாறன் அவர்களால் வெளியிடப்பட்டது.*

**குமாரின் உயிர்த் தியாகம் வீண்போகவில்லை.**

-நெடுமாறன்.

தமிழீழ மக்கள் வாழ்வா, சாவா எனப் போராடிக்கொண்டிருக்கும் கால கட்டத்தில் நேர்மை, துணிவு, தமிழுணர்வு ஆகியவற்றின் நிலைகளனாகத் திகழ்ந்து சிங்களப் பேரினவாதத்தை எதிர்த்துப் போராடியவர் குமார் பொன்னம்பலம்.

சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திப்பது போன்று சிங்களப் பேரின வாதத்தின் தலைமை குடிகொண்டிருக்கும் கொழும்பு நகரில் நெஞ்சுரத்துடன் அவர் வாழ்ந்ததும், அச்சமின்றித் தமிழருக்காகப் போராடியதும் வீர வரலாறாகும்- என்று தமிழ்நாட்டின் தமிழர் தேசியக் கட்சித் தலைவர் பழ. நெடுமாறன் குறிப்பிட்டிருக்கிறார்.

குமார் மறைந்துவிட்டாலும் அவரது குரல் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து ஒலிக்க வழியமைத்து விட்டுத்தான் சென்றிருக்கிறார். அவரது இளம் புதல்வர் கஜேந்திரகுமார் நாடாளுமன்ற உறுப்பினர் தேர்தலில் வெற்றிவாகை சூடியுள்ளார். தந்தை விட்டுச் சென்ற பணியை மகன் நிறைவேற்றுவாராக என்று நெடுமாறன் மேலும் தெரிவித்திருக்கிறார்.

(இது 05.01.2002 ஆம் திகதிசுடர் ஒளி பத்திரிகையில் வெளியானது.)

**திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தந்தையின் வழியில் உலக அபிப்பிராய மன்ற வழக்கு மன்றத்தில் தமிழ்த் தேசிய பிரச்சினையையும், போராட்டத்தையும் வலியுறுத்தி வெளிநாடுகளில் ஆற்றிய உரைகள் 28.03.2004 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் விளம்பரமாக வெளியாகி உள்ளன.**

திரு. பழநெடுமாறன் கூறியது போல தமிழ் தேசிய இனம் எதிர்பார்த்தது போல கஜேந்திரகுமார் செயலில் செய்து காட்டியிருக்கிறார்.

-டாக்டர் எஸ். மகேந்திரராசா.

இலங்கை தமிழரசுக் கட்சி X

ஜீ.ஜீ.பொன்னம்பலம் (கஜேந்திரகுமார் பொன்னம்பலம்) 5

முக்கிய குறிப்பு: முதல் தமிழரசுக்கட்சி சின்னமான வீட்டின் பக்கத்தில் புள்ளடியிட்டு உங்கள் முதன்மை விருப்பு வாக்குகளின் ஒன்றை 5 ஆம் இலக்கத்தின் மேல் தவறாது தயவுசெய்து புள்ளடியிடவும். வாக்குச்சீட்டில் வேட்பாளர் பெயர் இருக்கமாட்டாது.

---

## படகுச் சேவை நேரம் தற்காலிக மாற்றம்

ஊர்காவற்றுறைக்கும் காரை நகருக்கும் இடையிலான பாதைப் படகுச் சேவை நேரங்களில் தற்காலிகமாக மாற்றம் செய்யப்பட்டிருப்பதாக, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியிலாளர் ஜெ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார்.

இதன்படி ஊர்காவற்றுறையிலிருந்து காலை 7.30 மணி, முற்பகல் 9மணி, நண்பகல் 12 மணி, பிற்பகல் 4 மணி, மாலை 5 மணி ஆகிய நேரங்களிலும், காரைநகரில் இருந்து காலை 8 மணி, 9.30 மணி, முற்பகல் 12.30 மணி, பிற்பகல் 4.30 மணி, மாலை 6 ஆகிய நேரங்களிலும் படகுச் சேவை ஆரம்பமாகும்.

இச் சேவைக்கான கட்டணத்தை 2 ரூபாவிலிருந்து 5 ரூபாவாக அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் ஸ்ரீனிவாசன் மேலும தெரிவித்தார். (ஒ-4)

## கரவெட்டிப் பிரதேச ஓய்வூதியர்களுக்கு

யாழ்ப்பாணம்,மார்ச்30

கரவெட்டிப் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட ஓய்வூதியர்கள் தமக்குரிய ஏப்ரல் மாதத்திற்குரிய கொடுபனவு உறுதிச்சீட்டுக்களை எதிர்வரும் 6ஆம் திகதி பிரதேச செயலகத்திற்கு நேரில் வருகைதந்து பெற்றுக கொள்ளலாம் என்று பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களைப் பெறவரும்போது சம்பந்தப்பட்டவர்கள் தேசிய அ.அட்டை அல்லது ஓய்வூதியர் அடையாள அட்டையை எடுத்து வருதல் வேண்டும் - என்றும் தெரிவிக்கப்பட்டது.

## பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

அல்லைப்பிட்டி,மார்ச்30

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் எஸ்.சிறீஸ்கந்தராஜா தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் வித்தியாலய பழைய மாணவர்கள் அனைவரையும கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-8-ரி)

---

## தொண்டமானாறு கடற்கரை வீதி திருத்தப்படவில்லை

வடமராட்சி,மார்ச்30

தொண்டமானாறு கடற்கரை வீதி நீண்டகாலமாக சேதமடைந்த நிலையில் இருந்து வருகிறது.

கடந்த காலயுத்த நடவடிக்கைகளில் பெரிதும் பாதிக்கப்பட்ட இவ் வீதியைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என சில மாதங்களுக்கு முன்னர் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற குறைநிரப்புச் சேவையின் போது தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் இதுவரை இவ் வீதியைத் திருத்த நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லையென இப்பகுதி மக்கள விசனம் தெரிவிக்கிறார்கள்.(ம-8-173)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 07 - 07 - 1922 | 29 - 02 - 2004 |



### அமரர் இராயப்பு பிலிப்பு (செல்லத்தம்பி)

*மனிதர் குல மாணிக்கமாய்த் திகழ்ந்த அன்புத் தெய்வமே!*

*புனிதமாய் வாழ்ந்த உங்களை எங்களால் மறக்கவே முடியாது.*

உங்கள் ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனை இறைஞ்சுகின்றோம.

எமது அன்புத் தெய்வத்தின் நல்லடக்க ஆராதனையில் 04.03.2004 இல் கலந்து துக்கத்தில் பங்குகொண்ட அன்புள்ளங் கொண்டவர்களுக்கும அனுதாப அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்ட புனித அந்தோனியாராலய மக்கள், சென். அன்ரனீஸ் சனசமூக நிலையத்தினர், பாரதி ஓட்டுத் தொழிற்சாலையினர் (கிராமக் கோடு), மைக்றோபானு அலுமினியத் தொழிற்சாலையினர், வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினர், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்கள், அற்புதர் அரங்கில் அஞ்சலியுரையாற்றியவர்கள் மற்றும் பலவழிகளிலும் உதவிகள் செய்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம்நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் 31 ஆம் நாள் அஞ்சலி நிகழ்வும் திருப்பலிப் பூசையும் இன்று (30.03.2004) செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு புனித அந்தோனியர் ஆலயத்தில் இடம்பெறும். அதன்பின்பு அவரது இல்லத்தில் நடைபெறுகின்ற இரவுப்போசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மில் எதிர் ஒழுங்கை,*
*4 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.*

ச.செபமாலைமுத்து (சந்திரன்) குடும்பத்தினர்.

(30278)(34-11)

உதயன்

## தெற்குத் தரவுள்ள சமிக்ஞைதான் என்ன?

பொதுத்தேர்தலுக்கு இன்னும் மூன்று தினங்களே உள்ள நிலையில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க பி.பி.ஸி. தொலைக்காட்சிக்குப் பேட்டி ஒன்று அளித்திருக்கின்றார்.

தென்னிலங்கையில் ஆட்சியைப் பிடிப்பதற்காகக் கங்கணம் கட்டிக்கொண்டு களத்தில் நிற்கும் அணிகள் இரண்டு.

ஒன்று - ஐக்கிய தேசிய முன்னணி; மற்றது - ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி.

இதில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ள பிரதான பங்காளிக் கட்சி ஜே.வி.பி.

இந்த வகையில், ஜே.வி.பியின் தலைவரின் தேர்தல் காலக் கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

தற்போதைய பி.பி.ஸி. பேட்டியில் தமது பழைய பல்லவியையே ஜே.வி.பி. தலைவர் மீண்டும் பாடியுள்ளார் என்ற போதிலும், நாட்டின் முக்கியமான பிரச்சினையான இனப்பூசல் குறித்து அவர் கருத்துத் தெரிவித்திருப்பதால் அது விசேடமாகக் கவனிக்கப்பட வேண்டியதாகின்றது.

"இனப்பிரச்சினைக்குப் பேச்சு மூலம் தீர்வு காணப்படலாம். ஆனால், அதிகாரப் பரவலாக்கலோ, சமஷ்டி அடிப்படையிலான திட்டமோ அதற்கு அவசியமேயில்லை. ஐக்கிய இலங்கைக்குள் அனைவருக்கும் சமத்துவமான வாய்ப்பு என்ற அடிப்படையில் மட்டுமே தீர்வு எட்டப்படவேண்டும" - என்று அவர் கூறியிருக்கின்றார்.

அதாவது -

★ சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்கோ -

★ அதிகாரப் பரவலாக்கலுக்கோ -

ஜே.வி.பி. இணங்கவேமாட்டாது என்று அதன் தலைவரினால் மீண்டும் உறுதிபட எடுத்து விளக்கப்பட்டுள்ளது.

சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தன்னாட்சி அதிகாரத்தை சமஷ்டி அடிப்படையின் கீழ் வழங்குகின்ற தீர்வுத்திட்டம் ஒன்றை எதிர்பார்த்துத் தமிழினம் காத்திருக்கிறது.

விடுதலைக்காகத் தான் நடத்தி வந்த - வீரம் செறிந்த - தியாகம் நிறைந்த - போராட்டத்தை தமிழினம் இடைநிறுத்தி அமைதி வழியில் தீர்வு காண்பதற்கான வாய்ப்புக்கு இடமளித்துக் காத்து நிற்கின்றது.

இந்தநிலையில், அமைதித் தீர்வுக்கான தனது குறைந்த பட்சக் கோரிக்கையையே தமிழினம் பிரேரித்துள்ளது.

அதன் அடிப்படைகளைக்கூட ஏற்க மறுத்து, அதற்கு மாறாகக் கருத்து வெளியிடுகின்றார் ஜே.வி.பி. தலைவர்.

அது மட்டுமல்ல, தற்போதைய அமைதி முயற்சிகளுக்கு அனுசரணை உதவி வழங்கும் நோர்வேயையும் அதன் பங்கு பணியையும்கூட அவர் தாறுமாறாக விமர்சித்தார். இதுவரை நடந்த அமைதி நடவடிக்கைகளைக் கண்டிக்கவும்கூட அவர் தவறவில்லை.

இந்த நிலையில், ஜே.வி.பி. அங்கம் வகிக்கும் கூட்டணியின் கையில் ஆட்சியை இத்தேர்தல் மூலம் தென்னிலங்கைச் சிங்கள மக்கள் ஒப்படைக்க முன்வருவார்களேயானால், அமைதித் தீர்வுக்கான முயற்சிகளின் எதிர்காலம் என்னவாகும் என்ற பெரியதோர் கேள்வி எழுந்து உயர்ந்து பயமுறுத்துகிறது.

தமிழ்மக்களின் நியாயமான அபிலாஷைகளை - எதிர்பார்ப்பை - தனது கவனத்திலோ, கருத்திலோ தானும் எடுக்க மறுக்கும் கொள்கைப் போக்குடைய ஓர் அணியிடம் ஆட்சி ஒப்படைக்கப்படுமானால், அமைதி முறையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் அந்த அணியுடன் இணைந்து ஈடுபட முடியாத நிலைக்குத் தமிழினம் தள்ளப்படும்.

அப்போது தற்போதைய யுத்தநிறுத்தத்தை, முறித்து, அமைதி முயற்சிகளைக் கைவிட்டு, மீண்டும் உரிமைக்கான யுத்தத்தில் முனைப்புடன் ஈடுபட வேண்டிய சூழ்நிலை தமிழர் தரப்புக்கு ஏற்படுவதும் தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிடும்.

எனவே, இந்தத் தேர்தலில் தென்னிலங்கை மக்கள் எடுக்கப்போகின்ற முடிவே எதிர்காலத்தில் இந்த நாட்டில் அமைதி நிலை நீடிக்கபபோகின்றதா? அல்லது யுத்தம் மீண்டும் வெடிக்குமா? - என்பதைத் தீர்மானிக்கப்போகின்றது.

விட்டுக் கொடுத்து, அமைதி முறையில் தீர்வு காண்பதற்கு இணங்கக்கூடிய தலைவர்களை ஒதுக்க விட்டு, பேரினவாதப் போக்கிலும் அடக்கு முறையிலும் ஊறித் திளைத்த தலைவர்களைத் தென்னிலங்கைச் சமூகம் ஆட்சிப்பீடத்துக்கு அனுப்புமானால் அது அமைதி விவகாரத்தில் தமிழர் தரப்புக்குக் கொடுக்கப்பட்ட பிழையான சமிக்ஞையாகவே கொள்ளபபடும்.

தென்னிலங்கைச் சமூகம் தரப்போகும் சமிக்ஞை என்ன? சனியன்று தெரிந்துவிடுமே!

# மட்டக்களப்பு அரச அதிபர் மீதான தாக்குதலுக்குப் புலிகள் கண்டனம்

கிளிநொச்சி,மார்ச்30

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் மோனகுருசாமி மீது மேற்கொள்ளப்பட்ட கொடூரமான தாக்குதலைத் தமிழீழ விடுதலைப புலிகள் இயக்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்த் தேசியத்திற்கு எதிரானவர்களால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது தாக்குதல் சம்பவம் இதுவாகும். இத்தாக்குதல் சம்பவங்கள் அப்பிரதேச மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட சதி நடவடிகையாகும். இத்தேர்தலின் ஊடாகத் தமிழ் மக்கள் தேசிய உணர்வை வெளிப்படுத்தத் தயாராகின்ற காலத்தில் மேற்கொள்ளப்படும். இத்தகைய தாக்குதல் சம்பவங்கள் தமிழ் மக்கள் மத்தியில் குழப்பத்தை விழைவிக்கும் நோக்கம் கொண்டவையாகும்.

இத்தாக்குதல் சதி நடவடிக்கைகள் தொடர்பாக மக்களை விழிப்புடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ம)

### சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி

# 1977 இல் வழங்கிய ஆணையை மீண்டும் வழங்கத் தவறக்கூடாது

### நியூஸிலாந்து வாழ் ஈழத் தமிழர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்30

தமிழ்மக்கள் 1977ஆம் ஆண்டு தமது சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி வழங்கிய ஆணையை இம்முறை மீண்டும் வலியுறுத்தத் தவறக்கூடாது.

- இவ்வாறு நியூஸிலாந்தில் வாழும் ஈழத் தமிழர்கள் சார்பாக அந்தநாட்டின் தமிழ் அமைப்புகளின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. கடந்த 28ஆம் திகதி 'திரீகிங்ஸ்' (Three Kings) மண்டபத்தில் கூடிய ஒன்றியப் பிரதிநிதிகள் இந்த வேண்டுகோளை விடுத்தனர்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இனவாதத்தை மூச்சாகக்கொண்ட ஜனநாயக விரோத சக்திகளும் வன்முறைக் கும்பல்களும் கைகோர்த்து தேர்தல் களத்தில் இறங்கி வென்று அமைதிப் பேச்சைக் குழப்பி, நோர்வேயை சமாதானப்பேச்சு அனுசரணையாளர் பங்களிப்பிலிருந்து ஓரங்கட்டி தமிழ்மக்கள்மீது போரைத் திணித்து அமைதிப்பேச்சால் குழம்பிப்போன தங்கள் தமிழ் இன ஒழிப்புத் திட்டத்தைத் தொடரத் திட்டமிட்டுள்ளன. இதனாலும், 2004 ஏப்ரல் 2ஆம் திகதி நடக்கவுள்ள பொதுத் தேர்தல் ஈழத் தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போவதாலும் இந்தத் தேர்தலில் பொறுப்புடன் வாக்களிக்கவேண்டும்.

★ 2004 ஏப்ரல் 2ஆம் திகதி காலையில் முதல் வேலையாக வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு வாக்களித்து, 1977 ஆம் ஆணடு சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி வழங்கிய ஆணையை மீண்டும் வலியுறுத்தத் தவறக்கூடாது.

★ தமிழ்மக்களின் அபிலாசைகள், உரிமைகளுக்காகத் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு உறுதியுடன்செயற்படும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நாடாளுமன்றில் குரல்கொடுக்கத் தகுதியுள்ளவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மட்டுமே என்பதை இந்த ஒருமித்த வாக்களிப்பின்மூலம் அனைத்துலக சமூகத்திற்கு உணர்த்த வேண்டும்.

★ எண்பத்தைந்து ஆண்டுகளைத் தாண்டிவிட்ட ஈழத் தமிழர் உரிமைப் போராட்டத்தையும் தமிழ்மக்களையும் பிரிக்க முடியாது. தமிழ்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இசைவாக நாடாளுமன்றில் குரல்தர தமிழ் மக்களின் தெரிவு தமிழர் தேசியக் கூட்டமைப்பே என்பதை அனைத்துலக சமூகத்திற்கு உணர்த்தவேண்டும்.

★ தமிழ்மக்களுக்குரிய, பிரிக்கமுடியாத சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தனிநாட்டுக்கோரிக்கைக்கு மாற்றீடான பூரண அதிகாரப் பரவலாக்கலுடன் கூடிய இறுக்கமான இணைப்பாட்சிக் கட்டமைபபைப் பெற்றுத்தர அனைத்துலக சமூகம் சிங்களத் தலைமைகளுக்குத் தரவேண்டிய அழுத்தம் பற்றிய பொறுப்புணர்ச்சியையும் -

நீதி, நியாயமான ஒரு மதிப்புள்ள தீர்வுக்கு சிங்களத் தலைமைகள் இணங்கிவரும் என்ற நம்பிக்கையை தமிழர்கள் முற்றாக இழந்துவிட்ட நிலையை அனைத்துலக சமூகம் இனங்கண்டு ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கும் -

இந்தத் தேர்தல் ஓரேயொரு சந்தர்ப்பம் என்பதை ஈழத் தமிழ்மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டும் - என்றுள்ளது.

# வரலாற்றுத் திருப்புமுனை ஒன்றினை ஏற்படுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களியுங்கள்!

### சுவீடன் வாழ் ஈழத் தமிழர்கள் கோரிக்கை

ஸ்டொக்கோலம்,மார்ச்30

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்கக்கோரி வெளிநாடுகளில் வாழும் ஈழத் தமிழ்மக்கள் தமது உறவுகளிடம் கோரிக்கை முன்வைத்து வருகின்றனர். இந்த வரிசையில் சுவீடன் வாழ் ஈழத்தமிழர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இன்றோ 27 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இந்தக் காலத்தில் எம் மண்ணில் நிகழ்ந்தவற்றை நாம் கூறவேண்டியதில்லை. ஆனால், இவற்றின் கூட்டுமொத்தமாக நாம் புடம் போட்டதங்கமாக, பலமாக அடிபணிய மறுப்பவர்களாக நிற்கின்றோம். இதனை சர்வதேசச் சமூகம் புரிந்து கொண்டதால்தான் எம்மை உற்றுக் கவனிக்கிறது.

தமிழீழ மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு, தமிழ மக்கள் தங்களது அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காகப் பல வழிகளில் போராட்டங்களை நடத்தி இன்றைய காலகட்டத்தில் தமிழீழ மக்கள் யாவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பின்னால் அணிதிரண்டு தாயகம், தேசியம் சுயநிர்ணயம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தங்களது விடுதலைக்காகப் போராடி வருகின்றார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளே ஏகபிரதிநிதிகள் என்ற நிலையில் போராட்டம் விரிவாக்கம் பெற்றுள்ளது.

'அரசியல் வேறுபாடு, மதவேறுபாடு, பிரதேசவாதம், தனிப்பட்ட அபிப்பிராயங்கள் ஆகியவற்றை ஒதுககித்தள்ளிவிட்டு தியாகத்தின் மத்தியில் கட்டியெழுப்பப்பட்ட தமிழர் ஒருமைப்பாட்டுக்கு, ஐக்கியத்துக்கு ஆதரவு நல்குமாறு தமிழீழ மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம்.'

வரும்தேர்தலில் தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளைக் கொள்கைரீதியாகப் பிரதிபலித்து தமிழ் இனத்தின் சாடசியாக விளங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை ஆதரித்து அவர்களின் வரலாற்றுச்சிறப்புமிகு வெற்றிக்கு வழிகோல வேண்டும் என்பதே எம் அனைவரினதும் ஒருங்கிணைந்த வேண்டுகோள் ஆகும். இதுவே உலகெங்கும் பரந்துவாழும் ஈழத்தமிழினத்தின் ஆணித்தரமான கோரிக்கையுமாகும்.

இன்றைய நிலையில், நடைபெறும் நாடாளுமன்றத்தேர்தல் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும். சித்திரைமாதம் 2ஆம திகதி வரலாற்றுத் திருப்புமுனை ஒன்றினை ஏற்படுத்தும் வாயப்புத் தங்களுக்குக் கிடைத்துளளது.

இந்தவகையில், இந்த வரலாற்று வாய்ப்பினை நழுவவிடாது தமிழ்த தேசியக்கூட்டமைப்பு வேட்பாளர்களைப் பெருவெற்றி பெறவைக்கத் தயாராகுமாறு தமிழீழ மக்களை சுவீடன்வாழ் தமிழீழ மக்கள் வேண்டிக்கொள்கின்றோம்.

ஓராயிரம் வருடம் ஓய்ந்துகிடந்த பின்னர் வராது போல் வந்த ஒரு தலைமை - புலிச்சின்னத்தின் பின்னால் உரம் பெற்று நிற்கும் தமிழ்த் தேசியம் இவற்றின் நாயகர்கள் நீங்கள். உங்கள் ஆணையைப் புலம் பெயர்ந்து வாழும் நாம் சர்வதேசச் சமூகத்தின் முன் சுமந்துசென்று அவர்கள் மனச்சாட்சியை உலுப்புவோம் என உறுதி தருகிறோம் - என்றுள்ளது.

# பிக்குவின் வேடத்தில், கத்தரிக்கோலுடன் பிரதமரின் பேரணியில் சென்றவர் கைது!

கொழும்பு,மார்ச்30

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்ட பேரணியில் மஞ்சள் நிறத்திலான துப்பட்டியணிந்து, மேலே பௌத்த பிக்குவின் ஆடையை ஒத்த துணியைப் போர்த்தி, இடுப்பில் கத்தரிக்கோலுடன் காணப்பட்ட நபர் ஒருவரைக் கம்பளைப் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

அண்மையில் கம்பளை தனியார் பஸ் நிலையத்தில் பேரணியின் இறுதியில் நடைபெறவிருந்த கூட்டத்தின்போது பிரதமர் மேடையில் ஏற முற்பட்ட சமயம், மேடைக்கு அண்மையில் மக்கள் மத்தியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய மேற்படி நபரைக் கம்பளைப் பொலீஸார் உடனடியாகக் கைதுசெய்தனர்.

இக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்த பௌத்த பிக்குகள் அனைவரும் வாகனங்களில் வந்திருந்தபோது இந்த நபர் மட்டும் கால் நடையாக வந்ததும், பொலீஸாரின் கேள்விகளுக்கு முரணான பதில்களைத் தெரிவித்ததும் பொலஸாருக்கு மேலும் சந்தேகத்தை அதிகரித்தது.

இந்த நபர் தொடர்பான தீவிர விசாரணைகளைப் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-8)

### நாளை

பங்குனி 18
புதன்கிழமை
(31.03.2004)
திதி: தசமி
இரவு 7.15 வரை
நட்சத்திரம்: பூசம்
மாலை 6.00 வரை.
சுபநேரம்: 4.41 - 6.11
ராகுகாலம்: 12.11 - 1.41
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நல்லவற்றைப் பேசு இல்லையேல் மௌனமாக இரு.

### துன்பமிலா வாழ்வுதனை என்றும் தருவாயே!

*மங்கையொரு பாகனே நஞ்சையணி கண்டனே*
*மன்மதனை அருவாகக் கண்ணால் எரித்தவனே*
*எங்கும் நிறைந்தவனே அன்பருக் கெளியனே*
*எருதேறி அம்மையொடு வந்து அருள் புரிவாய்*
*பொங்கு வைகை தனை அடைக்கப் பிட்டுண்டு மண்சுமந்தாய்*
*போற்றிடுவா ருள்ளமதில் என்றுமுறை பவனே*
*துங்க எழில் தங்குவண்ணைத் தலத்திலே உறைபவனே*
*துன்பமிலா வாழ்வுதனை என்றும் தருவாயே!*

சங்கீத பூஷணம் அ.கி.ஏரம்பமூர்த்தி
(இன்று வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரன் ஆலயத்தில் 14ஆம் திருவிழா)

# இனப்பிரச்சினை - பொதுத்தேர்தல் - திகாமடுல்ல

பகுதி II

இம்மாவட்டத்தின் குடித்தொகையும் இன விகிதாசாரமும் பிரதேசப் பிரிவின் அடிப்படையில் அட்டவணை V இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை V**

**பிரதேசப் பிரிவு அடிப்படையில் குடித்தொகையும் இனப்பரம்பல் விகிதாசாரமும் - 2001**

| பிரிவு | குடித் தொகை | முஸ். | தமி. | சிங். | ஏனையோர் |
|---|---|---|---|---|---|
| அட்டாளைச்சேனை | 35,779 | 93.1 | 01.7 | 05.2 | 0.0 |
| அக்கரைப்பற்று | 34,961 | 96.3 | 03.0 | 00.7 | 0.0 |
| ஆலையடிவேம்பு | 22,454 | 00.5 | 97.1 | 01.6 | 0.8 |
| அம்பாறை | 37,992 | 00.8 | 01.0 | 98.0 | 0.2 |
| தமன | 34,754 | 00.5 | 00.1 | 99.7 | - |
| தெஹியத்திகண்டிய | 62,612 | 00.2 | 00.1 | 98.8 | 0.9 |
| இறக்காமம் | 11,442 | 89.1 | 03.5 | 07.0 | 0.4 |
| கல்முனை / கல்முனைத் தமிழ் | 70,439 | 60.9 | 37.8 | 00.5 | 0.7 |
| காரைதீவு | 16,210 | 36.7 | 61.9 | 01.1 | 0.3 |
| லகுகல | 07,587 | - | 08.4 | 91.1 | 0.5 |
| மகாஓயா | 18,023 | 00.4 | 00.1 | 99.5 | - |
| நாவிதன்வெளி | 17,330 | 30.7 | 66.3 | 02.9 | - |
| படியத்தலாவ | 15,648 | 00.6 | 00.1 | 99.3 | - |
| பொத்துவில் | 28,404 | 76.3 | 20.0 | 03.3 | 0.4 |
| சாய்ந்தமருது | 24,018 | 99.9 | 00.0 | 00.1 | 0.0 |
| சம்மாந்துறை | 51,142 | 85.5 | 13.9 | 00.5 | 0.1 |
| திருக்கோவில் | 23,739 | 00.2 | 98.8 | 10.0 | 0.0 |
| உகண | 52,137 | 00.1 | 00.1 | 99.8 | 0.0 |

மூலம் குடிசனக் கணிப்பு - 2001

இம்மாவட்டத்தில் 19 பிரதேச/உப அரச அதிபர் பிரிவுகள் உள்ளன. கல்முனைத் தமிழ் பிரிவு தரம் உயர்த்தப்படாததால் தனியான புள்ளி விவரங்களைக் கொண்டிருக்கவில்லை. எனினும், பிரிவில் தமிழ் மக்கள் மிகப்பெரும்பான்மையாக உள்ளனர். முஸ்லிம்கள் ஏழு பிரிவுகளிலும், சிங்களவர்கள் ஏழு பிரிவுகளிலும் தமிழர்கள் கல்முனைத் தமிழ்ப் பிரிவு உட்பட ஐந்து பிரிவுகளிலும் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். காரைதீவு, நாவிதன் வெளிப்பிரிவுகளில் முஸ்லிம்கள் 1/3 வீதத்தினராகவும் தமிழர்கள் பொத்துவிலில் 20 வீதமாகவும், சம்மாந்துறையில் 13.9 வீதமாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. 15 பிரிவுகளில் யாராவது ஒரு இனத்தவர் 85 வீதத்திற்குமேல் இருப்பதும், அதில் ஏழு பிரிவுகளில் யாராவது ஒரு இனத்தவர் 95 வீதத்துக்குமேல் இருப்பதும் கவனிக்கத்தக்கது.

2001 குடிசனக் கணிப்புப்படி ஒரு சதுரகிலோமீற்றருக்கு 137 பேர் அம்பாறை மாவட்டத்தில் இருந்தனர். தமிழ் பேசும் கரையோர வலயத்தில் சராசரிக் குடியடர்த்தி சதுர கிலோமீற்றருக்கு 391 ஆகவும் சிங்கள பேதம உள்ள வலயத்தில் சதுரகிலோமீற்றருக்கு 68 ஆகவும் இருந்தன. இம்மாவட்டத்தின் குடிசன அடர்த்தி தேசியக் குடிசன அடர்த்தியில் அரைவாசியாக உள்ளது. இம்மாவட்டத்திற்குள் குறிப்பிடத்தக்க குடியடர்த்தி வேறுபாடுகள் காணப்படுகின்றன. கல்முனை மாநகரசபை உள்ளடங்கும் கரவாகுப் பிரதேசம் சராசரி கிலோமீற்றருக்கு 5087 பேரை கொண்டிருந்தது. கல்முனை மாநகரசபைப் பிரதேசப் பரப்பும் முன்னைய கல்முனைத் தேர்தல் தொகுதி அல்லது இன்றைய கல்முனை வாக்களிப்புப் பிரிவும் ஒரு பிரதேசமாக உள்ளது. கல்முனையை அண்டிய நிந்தவூர் - காரைதீவுப் பகுதி சதுர கிலோமீற்றருக்கு 909 பேரையும் அட்டாளைச்சேனைப் பகுதி சதுரகிலோமீற்றருக்கு 620 பேரையும், அக்கரைப்பற்றுப் பகுதி சதுர கிலோமீற்றருக்கு 404 பேரையும், சம்மாந்துறைப் பகுதி சதுரகிலோமீற்றருக்கு 331 பேரையும் கொண்டுள்ளன. ஏனைய பகுதிகள் யாவும் சதுர கிலோ மீற்றருக்கு 150 பேருக்குக் குறைவானோரைக் கொண்டுள்ளன. இவற்றில் பாணமைப்பற்று சதுர கிலோ மீற்றருக்கு 8 பேரை மாத்திரம் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இம்மாவட்டத்தின் பொருளாதாரம, நீர்ப்பாசன வசதி கொண்ட நெற்செய்கையை வலுவாகக் கொண்டது. இலங்கையில் வேறெந்த மாவட்டத்திலும் பார்க்க இம்மாவட்டத்திலேயே பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம்நெற்செய்கை செய்யப்படுகிறது. மொத்தமாக நெற்செய்கை செய்யப்படும் 73, 572 ஹெக்டேயரில், பெரிய நீர்ப்பாசனத திட்டம் மூலம் 59,824 ஹெக்டேயரும் சிறிய நீர்ப்பாசனத் திட்டம்மூலம் 3,425 ஹெக்டேயரும், மானாவாரியாக 10,323 ஹெக்டேயரும் செய்யப்படுகிறது. இலங்கையின் நெற்செய்கையில் முதலிடம் வகிக்கும் மாவட்டம் இதுவாகும.

விவசாயத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்துடன் விவசாயம் சார் கைத்தொழில், மீன்பிடி, உள்நாட்டு வர்த்தகம், வெளிநாட்டு வேலை, அரசதுறை வேலைகள் போன்றவற்றில் ஏற்பட்ட முன்னேற்றமும் மாவட்டத்தின் பொருளாதாரம் சிறப்படைய வழிவகுத்தது. மேலும் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டதால் இம்மாவட்டத்தின் கல்வி, சமூகத்துறைகளில் முன்னேற்றம் காணப்பட்டது. கல்முனை நகரம் அந்தஸ்து பெற்றதும், அதன்வழியாக இம்மாவட்டத்தின் நகர செயற்பாடுகளில் அம்பாறை நகரமும் கல்முனை நகரமும் பங்கெடுக்கத் தொடங்கின. மேலும் கல்முனை வர்த்தக செயற்பாட்டில் புதிய உத்வேகத்தை மாவட்டதிற்கு அளித்துள்ளது.

**தற்போதய அம்பாறை மாவட்டத்தின் பிரதேச செயலகப் பிரிவுகள்**

அம்பாறை மாவட்டப் பிரதேச செயலரின் கோட்டங்கள்



1. அட்டாளைச்சேனை
2. ஆலையடிவேம்பு
3. தமன
4. தெஹியத்தயகண்டிய
5. கல்முனை
6. கல்முனைப் தமிழக் கேட்டம்
7. காரைதீவு
8. அக்கறைப்பற்று
9. லகுகல
10. மகாஓயா
11. அம்பாறை நகரம்
12. நிந்தாவூர்
13. படியத்தலாவ
14. பொத்துவில்
15. சம்மாந்துறை
16. திருக்கோவில்
17. உகண
18. நாவிதன்வெளி
19. இறக்காகமம்

முஸ்லிம்கள் இம்மாவட்டத்தில் குடித்தொகையில் முதலிடம் வகிப்பதால், அவர்களின் அரசியற் செயற்பாட்டில் இம்மாவட்டம் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தோற்றமும் எழுச்சியும் இம்மாவட்டத்துடன் இணைந்திருப்பதால் கட்சியின் அரசியல் செயற்பாடுகள் வழியாகக் கிடைத்த பலாபலன்கள் இம்மாவட்டத்தின் கரையோர வலயத்திற்குக் கிட்டியது. மூவின மக்களும் இங்கு வாழ்வதால் ஒருவரை ஒருவர் பார்த்து போட்டிக் கோரிக்கைகள் இன அடிப்படையில் எழுந்தவணம் உள்ளன. அரச அதிபர் பிரிவுகள், கல்வி நிறுவனங்கள், மருத்துவ மனைகள் போன்ற பல கோரிக்கைகள் மூவினத்தாராலும் முன்மொழியப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட பின்னணியில் 2004 திகாமடுல்ல தேர்தல் போக்குகளை நோக்கலாம்.

இம்மாவட்டத்தின் சனத்தொகை 5,89,344 பேராகும் இவற்றுள் வாக்காளர் எண்ணிக்கை 3,79,044 ஆகும். இது மொத்த சனத்தொகையில் 64.3 வீதமாகும். இன அடிப்படையில் வாககாளர் எண்ணிக்கை பின்வருமாறு:-

| | |
|---|---|
| முஸ்லிம்கள் | - 1,58,200 |
| சிங்களவர் | - 1,49,647 |
| தமிழர் | - 71,137 |

வாக்களிப்பு பிரிவுகள் அடிப்படையில் வாக்காளர் எண்ணிக்கை பின்வருமாறு:-

| | |
|---|---|
| கல்முனை | - 60,456 |
| அம்பாறை | - 1,32,371 |
| சம்மாந்துறை | - 63,166 |
| பொத்துவில் | - 1,23,051 |

இம்மாவட்டம் 7 அங்கத்தவர்களைத் தெரிவுசெய்ய உரிமை பெற்றது. இம்முறை இங்கு நாற்கோணப் போட்டி நிலவுவதாக அறியக்கிடக்கிறது. இதனை விளங்கிக் கொள்ள 2001 தேர்தல் முடிவுகளை நோக்கலாம்.

**திகாமடுல்ல தேர்தல் முடிவுகள் -2001**

| கட்சி | | வாக்கு | |
|---|---|---|---|
| EPDP | - | 5,101 | X |
| UNP | - | 58,468 | |
| JVP | - | 9,502 | X |
| TULF | - | 48,789 | |
| HLF | - | 1,165 | X |
| PA | - | 65,246 | |
| RJP | - | 86 | X |
| SLPF | - | 82 | X |
| SLMK | - | 160 | X |
| SLMC | - | 75,257 | |
| SU | - | 229 | X |
| SMBP | - | 39 | X |
| JSP | - | 95 | X |
| Ind 11 | - | 11 | X |
| Ind 12 | - | 13 | X |
| Ind 13 | - | 07 | X |
| Ind 14 | - | 93 | X |
| Ind 15 | - | 35 | X |

செல்லுபடியான வாக்குகள் 2,80,215
செல்லுபடியற்ற வாக்குகள் 17,225
மொத்த வாக்குகள் 2,97,440

5 வீத வெட்டுப்புள்ளி = 14,011

X என்பது 5 வீத வெட்டுப்புள்ளிக்கு கீழ் வாக்குப் பெற்ற கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள்.

இக்கட்சிகளுள் 5 வீதத்திற்குக் கூடுதலான வாக்குகளைப் பெற்ற கட்சிகள் பின்வருமாறு:-

முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி.

அங்கத்துவம் பெறத் தகுதி பெற்ற கட்சிகளும் அவை பெற்ற வாக்குகளும் பின்வருமாறு:-

| கட்சி | பெற்றவாக்குகள் | வீதம் |
|---|---|---|
| SLMC | 75,257 | 26.86 |
| PA | 65,246 | 23.28 |
| UNP | 58,468 | 20.87 |
| TULF | 48,789 | 17.41 |
| செல்லுபடியான வாக்குகள் | 2,80,215 | 94.21 |
| செல்லுபடியற்ற வாக்குகள் | 17,225 | 05.79 |
| மொத்தம் அளிக்கப்பட்ட வாக்குகள் | 2,97,440 | 82.51 |

கட்சிகள் பெற்ற வாக்குகள் அடிபபடையில் முஸ்லிம் காங்கிரஸ் போனஸ ஆசனத்தைப் பெறுகிறது. மிகுதி ஆறு ஆசனங்களைப் பங்கீடு செய்யும் போது அதாவது கட்சிகள் பெற்ற வாக்குகளை (247,760 6) ஆறால் பிரிக்க வரும் பெறுமானம் 41,293 ஆகும் இதனடிப்படையில் முஸ்லிம் காங்கிரஸ் ஓர் ஆசனத்தைப் பெற்று மிகுதியாக 33,964 வாக்குகளைக் கொண்டுள்ளது. மக்கள் கூட்டணி ஓர் ஆசனத்தைப் பெற்று 23,953 வாக்குகளை மிகுதியாகக் கொண்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி ஓர் ஆசனத்தைப் பெற்று மிகுதியாக 17,175 வாக்குகளைக் கொண்டுள்ளது.

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி ஓர் ஆசனத்தைப் பெற்று 7,496 வாக்குகளை மிகுதியாகக் கொண்டுள்ளது. முதற்சுற்றில் ஒதுக்கப்பட்ட ஆசனங்கள் இரண்டும் கூடிய எச்ச வாக்குகளின் அடிப்படையில் முஸ்லிம் காங்கிரஸுக்கும், மக்கள் முன்னணிக்கும் ஒதுக்கப்பட்டன.

இப்பின்னணியில், 2004 தேர்தலை நோக்கின், இந்த மாவட்டத்தில் 14 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 27 சுயேச்சைக்குழுக்களுமாக மொத்தம் 41 பிரிவினர் 410 வேட்பாளர்களுடன் 7 ஆசனங்களுக்காகக் களத்தில் இறங்கியுள்ளனர். பின்னர் ஓரிரு சுயேச்சைக் குழுக்கள் தேர்தலில் இருந்து விலகியதாகப் பத்திரிகை வாயிலாக அறியமுடிகிறது. வேறெந்த மாவட்டத்திலும் இல்லாத அளவுக்கு இம்மாவட்டத்தில் பெருந்தொகையானோர் தேர்தலில் போட்டியிடுவது, இம்மாவட்டம் எந்தளவிற்கு அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும், அரசியல் எந்தளவிற்கு இம்மாவட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் தெளிவாக உணர்த்துகின்றது. எனினும், கடந்த தேர்தல் போல் இத்தேர்தலிலும் நாற்கோணப் போட்டியே நிலவுகின்றது.

இம்மாவட்டம் இலங்கையின் வேறெந்த மாவட்டத்தையும் பார்க்கக் கூடிய எண்ணிக்கையான முஸ்லிம் பிரதிநிதிகளை முஸ்லிம்களின் வாக்குகளினால் தெரிவுசெய்து நாடாளுமன்றம் அனுப்பக்கூடிய பின்புலத்தைக கொண்டது. கடந்த தேர்தலில் நாலு முஸ்லிம் பிரதிநிதிகள் இம் மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களின் வாக்கு, அரசியற்பலத்தின் மூலம் மேலும் இருவர் தேசியப் பட்டியலில் அங்கத்துவம் பெற்றனர். இம்மாவட்டமே முஸ்லிம் காங்கிரஸின் தளமாக இருந்து வருகிறது. இம்மாவட்டத்தில் முன்னைய முஸ்லிம் தலைவர்கள் ஆரம்பத்தல் தேசியக் கட்சிகளின் வழியாகத் தம் அரசியலை முன்னெடுத்தனர். பின்னர் முஸ்லிம் காங்கிரஸின் வளர்ச்சியோடு தம்மை இணைத்து தேசியக்கட்சிகளில் தம் அரசியற்செயற்பாடுகளைக் குறைத்தனர்.

முஸ்லிம் காங்கிரஸில் ஓரணியாக நின்றவர்கள் இன்று இரு அணியினராகப்பிரிந்து செயற்படுவது கவனிக்கத்தக்கது. எனினும், இவர்கள் தேசியக் கட்சிகள் இரண்டுடனும் நிபந்தனைகளுடன் கூடிய புரிந்துணர்வின் அடிப்படையில் தமது அரசியல் உறவை மேற்கொண்டு வருகின்றனர். நாடளாவிய ரீதியில் முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து செயற்பட்டபோதும், இம்மாவட்டத்தில் இரு கட்சிகளும் தனித்துப் போட்டியிடுகின்றன. தனித்துப் போட்டியிடுவதன் பிரதான நோக்கம் இணைந்து போட்டியிடுவதிலும் பார்க்க தனித்துப் போட்டியிடுவதனால் இரு கட்சிகளும் கூடிய பிரதிநிதித்துவத்தைப் பெறுவதுடன் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யலாம் என்பதாகும். 1994 தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் முஸ்லிம்கள் போட்டியிட்டபோதும் விருப்பு வாக்குமுறையில் வென்ற மூவரும் சிங்கள சமூகத்தைச் சார்ந்தவர்களாவர். இதனால் 2001 தேர்தல் போல் இம்முறையும் முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் வேட்பாளர்களையும் ஐக்கிய தேசிய முன்னணி சிங்கள வேட்பாளர்களையும் தேர்தலில் நிறுத்தி சமூகப் பின்னணியில் தமது பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க முயல்கின்றன.

முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்த பிரிவினரும் தேசிய ஐக்கிய முன்னணியும் (NUA) தேசிய ஐக்கிய சுதந்திர முன்னணியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுகின்றனர். கடந்த தேர்தலில் மக்கள் முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் பெற்ற வாக்குகளைக் கூட்டிப் பார்ப்பின் இது முஸ்லிம்காங்கிரஸ் பெற்ற வாக்குகளை விட 509 வாக்குகளே குறைவாக உள்ளது. இதனால் சிங்கள முஸ்லிம்களின் பலமான இணைப்பு மூலம் தேர்தலில் மாவட்டத்தின் முதல நிலையை அடையலாம் என்ற திறமுறை இங்கு கடைப்பிடிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசிய முன்னணியும் முஸ்லிம் காங்கிரஸும் தனித்தனியே போட்டியிட்டுக் கூடுதலான ஆசனங்களைப் பெறலாம் எனவும் தேசிய ஐக்கிய சுதந்திர முன்னணியும் ஏனைய முஸ்லிம் பிரிவுகளும் இணைந்து போட்டியிட்டு முதன்மை நிலையை அடையலாம் எனவும் கருதிச் செயற்படுகின்றன.

தமிழர்களைப் பொறுத்தவரையில் இம்மாவட்டத்தின் சகல தமிழ் வாக்காளர்களும் உயர்வாகவும் சரியாகவும் சிதறாமலும் ஒருமுகப்பட்டும் வாக்களிப்பின் தமது பிரதிநிதித்துவத்தைத் தக்கவைத்துக்கொள்ளலாம். இதில் தவறுகள் ஏற்படின் பிரதிநிதித்துவம் இழக்கப்படலாம் என்பது அம்பாறைத் தமிழ்க் கட்சிகளதும் தமிழ் சிவில் சமுகத்தவரதும் அறிவுரையும் எச்சரிக்கையும் ஆகும். மிகக் கடுமையான நாற்கோணப் போட்டி நிகழுமிடத்து மிக அருமையாகத் தமிழ் கட்சி ஒன்று முதன்மை நிலையை அடையலாம்.

அம்பாறை மாவட்டத் தேர்தலில் முஸ்லிம் தலைவர்களும் அமைச்சர்களும் மூவின முன்னாள் நாடாளுமன்றப் பிரதிநிதிகளும் களத்தில் நிற்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இன பிரதேச உணர்வுகள் மேலோங்கி நிற்பதும் கவனிக்கற்பாலது. முஸ்லிம்களும் சிங்களவர்களும் மாவட்டக்குடித்தொகையில் சமனாக இருக்கும் நிலையில் தலா மூன்று பிரதிநிதிகளையும் தமிழர் ஒரு பிரதிநிதியையும் பெறும் பொழுதுதான் அது இனங்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்படும். இதில் மாற்றம் ஏற்படின் குறைவாகப் பெறும் இனக்குழுமம் தாம சார்ந்த அரசியற் கட்சிகளுக்குப் பல அழுத்தங்களைக் கொடுக்கக்கூடும்.

அம்பாறை மாவட்டத்திற்குள் முஸலிம்கள் கூடிய பிரதிநிதித்துவத்தைப் பெறமுயலும் நிலையில் கல்முனை சாய்ந்தமருது, சம்மாந்துறை, நிந்தாவூர், அக்கரைப்பற்று, பொத்துவில் ஆகிய பகுதி மக்கள் தத்தம் பகுதிகளிலிருந்தே பிரதிநிதித்துவம் பெற வேண்டும் என மூச்சாக உள்ளனர் அல்லது தேசியப் பட்டியல் மூலமாவது தத்தம் பகுதிக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்கவேண்டும் என்பதில் கவனமாக உள்ளனர். கடந்த காலத்தில் மாவட்ட்த்தில் தெரிவுசெய்யப்பட்ட முஸ்லிம் நாடாளுமன்றப் பிரதிநிதிகளும் இம்மாவட்டத்துடன் தொடர்பான தேசியப் பட்டியல் பிரதிநிதிகளும் கலமுனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, பொத்துவில், அட்டாளைச்சேனை ஆகிய பகுதிகளுடன் தம்மைத் தொடர்புபடுத்திச் செயற்பட்டதைக் காணமுடிநதது.

சிங்கள மக்கள் மத்தியில் முஸ்லிம், தமிழர் போல் பிராந்திய உணர்வுகள் மேலோங்காது கட்சி உணர்வே மேலோங்கி நிற்கிறது. எனினும், மகாவலி ஒழுங்கு தெஹியத்த கண்டிய, வித்தனைப் பகுதிமக்கள் தமது பிரதிநிதியைத் தெரிவுசெய்ய விரும்பி நிற்கின்றனர். கடந்த காலங்களில் சிங்களப் பிரதிநிதிகள் அம்பாறை - கல்லோயா குடியேற்றத் திட்டப் பகுதிகளிலிருந்தே தெரிவுசெய்யப்படுவது வழக்கம்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களின் பரம்பல் காட்டப்பட்டுள்ளது.

**அம்பாறை மாவட்டத்தில் தமிழர் பரம்பல் - 2001**

| இடம் | எண்ணிக்கை |
|---|---|
| திருக்கோவில் | 23,432 |
| ஆலையடி வேம்பு | 21,794 |
| கல்முனை | 26,593 |
| காரைதீவு | 10,029 |
| நாவிதன்வெளி | 11,494 |
| பொத்துவில் | 5,657 |
| சம்மாந்துறை | 6,822 |
| அக்கரைப்பற்று | 1,040 |
| ஏனைய பகுதிகள் | 3,319 |
| மொத்தம் | 110,180 |


தமிழர் பரம்லை நோக்கின் அக்கரைப்பற்று - பொத்துவிலுக்கு இடைப்பட்ட கரையோரப் பிரதேசத்தில் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக வாழ்கின்றார்கள். இவ்வலயத்திற்குள் 52,559 பேர் இருப்பதுடன் இது மாவட்டத்தின் மொத்தக் குடித்தொகையில் 47.7 வீதமாக உள்ளது. திருக்கோவில், தம்பிலுவில், பனங்காடு, கருங்கொடித் தீவு, கோமாரி, பொத்துவில் (தமிழ்) சங்கமான் கண்டி ஆகிய பெரிய தமிழ்க் கிராமங்கள் இவ்வலயத்திற்குள் அடங்குகின்றன. வலயத்திற்கு வெளியில் கல்முனை, நாவிதன்வெளி, சம்மாந்துறை, காரைதீவு ஆகிய பகுதிகளில் 54,938 பேர் வாழ்கின்றனர். இது மாவட்ட தமிழ்க் குடித்தொகையில் 49.9 வீதமாகும்.

(15ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் | பொதுத் தேர்தல் 2004 ஏப்ரல் 2

அன்பான
வாக்காளப் பெருமக்களே!
தமிழ்த் தேசியக்
கூட்டமைப்பின்
இணைப்பாளரான
அரசியல் விஞ்ஞானத்தில்
முதுமாணிப் பட்டம் பெற்ற
[M.A.(லண்டன்)]

**திரு.க.சுரேஷ்**
**பிரேமச்சந்திரன்!**



தமிழ்த் தேசிய
இனத்தின் தன்னாட்சியைப்
பெற்றிட
சர்வதேசத்திற்கும்
எங்கள் நிலைமையைத்
தெளிவுபடுத்த எங்களின்
பிரதிநிதியாய்

**திரு.க.சுரேஷ்**
**பிரேமச்சந்திரன்**

## இவர்

☆ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியவர்களில் முதன்மையானவர்.

☆ தமிழ், ஆங்கில மொழிகளில் மிகச் சிறந்த பேச்சாளர்.

☆ தமிழர் தாயகத்தின் சகல பிரதேசங்களின் வளங்களையும், வாழ்வியல்புகளையும் நன்கு உணர்ந்து அறிந்தவர்.

☆ தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை விட்டுக்கொடுக்காமல் போராடும் போராளி.

☆ 2001பொதுத் தேர்தலிலும் கூட்டமைப்பின் வெற்றிக்குத் தன்னை அர்ப்பணித்து உழைத்தவர்.

☆ விவசாயக் குடியேற்றத் திட்டத்தில் (கிளிநொச்சி) பிறந்து வளர்ந்து ஆரம்பக் கல்வியைக் கற்றதால் விவசாயிகளின் தேவையை நன்கு உணர்ந்தவர்.

## இவரால்

☆ தமிழீழ விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக் கப்பட்டுள்ள இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபையைப் பெற!

☆ சர்வதேச ஆதரவைத் தமிழர்கள் பக்கம் திசை திருப்ப!!

☆ சர்வதேச இராஜதந்திரங்களை மேற்கொள்ள!!!

☆ காத்திரமான அரசியல் செயற்பாட்டிற்கு நாடாளுமன்றத்தைப் பயன்படுத்த!

☆ தமிழர் தாயகத்தின் அரசமைப்பு முறைகளில் முன்னேற்றம் காண!!

☆ கைத்தொழில், கடற்றொழில், கமத்தொழில், வணிகம், கல்வி, விஞ்ஞான தொழில்நுட்பம், உயர்கல்வி ஆகியவற்றில் உயர்நிலை பெற!!!

## எனவே எதிர்வரும் ஏப்ரல் 02 ஆம் திகதி

வீட்டுக்கு நேரே 🏠 புள்ளடியிட்டும் இவரின் இலக்கம் ஒன்றுக்கு மேலேயும் X புள்ளடியிட்டு

**திரு.க.சுரேஷ்பிரேமச்சந்திரன் M.A.** அவர்களையும் நாடாளுமன்ற உறுப்பினராக அதிகப்படியான மேலதிக வாக்குகளால் தெரிவுசெய்வோம்.

## இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 🏠 X

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 (X) | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## கணனி விற்பனைக்கு

கம்பியூட்டர் PIII விற்பனைக்கு உண்டு. பிறிண்டர் (Hp3500 Series) என்பவற்றுடன் 50,000/=. தொடர்பு: T.கணபதிப்பிள்ளை, பாமதேவன்புலம், தாவடி வடக்கு, கொக்குவில்.(28973)

கிளிநொச்சியில் A9 பாதையில் கடைகளும் வீடும் கட்டக்கூடிய கிணற்றுடன் அமைந்த அரை ஏக்கர் காணி (சிங்கள மகா வித்தியாலயத்துக்கு முன்பாக) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 024 222 3640 (30264)

உரும்பிராய் வடக்கு, கற்பகப் பிள்ளையார் ஒழுங்கையில் கணேசா சனசமூக நிலையத்திற்கு அருகில் 6½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. அதிகூடிய விலை தருபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும். தொடர்பு: திருமதி ப.சர்வேஸ்வரன், சிவசக்தி கோயிலடி, அச்சுவேலி தெற்கு.(30266)

## மணமக்கள் தேவை

1972இல் பிறந்த, எஞ்சினியர் மணமகன், மணமகள் ஆகிய இருவருக்கும் டாக்டர், எஞ்சினியர் தரத்தில் மணமகள் தேவை. தொடர்பு: வி.இ: 2210, மே.பா உதயன், யாழ்ப்பாணம்.(30262)

## தவறிவிட்டது

தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த வன்னியன் சுந்தரலிங்கம் என்பவரின் தே.அ.அ. (இல.610973540V), விசேட அ.அ.(இல.0907016720) என்பன மல்லாகம் சந்தி, கே.கே.எஸ். வீதியில தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மல்லாகம் சீனன் கடையில் ஒப்படைத்துதவவும் T.P.077 6048908. (30184)

## வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலை மன்றத்தில் வைத்து இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை வளர்ப்பு நாய்களுக்கு விசர்நாய தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும், பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையமும் இணைந்து இந்த நடவடிக்கையினை மேற்கொள்ளவுள்ளன.

கலை மன்றச் சுற்றாடலில் வளர்ப்பு நாய்களை வைத்திருப்போர் தவறாது இதனை ஏற்றிக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ம-8-173)

## கணனிப்பயிற்சி நிலையம் திறந்துவைப்பு

நெடுந்தீவு் பிரதேச மாணவர்களின நன்மை கருதி அங்குள்ள தென்னிந்தியத் திருச்சபை வளாகத்தில் அமைக்கப்பட்ட கணனிப்பயிற்சி நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் நிலையத்தைச் சம்பிரதாயபூர்வமாகத திறந்துவைத்தார். இதற்குரிய கணனிகளை கனடாவில் வசித்துவரும் நெடுந்தீவைச் சேர்ந்த ஆர்.மருதநாயகம் குடும்பத்தினர் வழங்கியிருந்தனர். (ம-10-ரி)

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் தனியார் மயப்படுத்தப்பட்ட Medical Clinic ஒன்றுக்கு ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் (MLT) தேவை. கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.

மேலும் கம்பியூட்டர் மயமான இயந்திரத்தில் (Computeriled Analyser) இரத்தப் பரிசோதனைகள் பழக விரும்பும் விஞ்ஞான அல்லது ஆய்வுகூட அறிவுடைய பெண் பிள்ளைகளும் தேவை.

**சென்றல் கிளினிக்**

வைமன் றோட், நல்லூர்.
T.P. 222 6069
காலை 7.00 - 9.00
மாலை 5.00 முதலாக
(30263) (21-14-26)

## தவறிவிட்டது

28.3.2004 ஞாயிறன்று காலை (18x10), இரண்டு படங்கள் லெமினேட் செய்தபடியே யாழ்.காங்கேசன்துறை வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

*சன்மானம் வழங்கப்படும்.*

**பாரத் ஸ்ருடியோ,**
82/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# மின்இணைப்பு வழங்கக் கோரிக்கை

மானிப்பாய்,மார்ச்30

மானிப்பாய் மேற்கு, கட்டுடை கேலன்காமம் வீதியில் வசிக்கும் குடும்பங்களுக்கு விரைவில் மின்சாரம் வழங்குமாறு மின்சாரசபையின் பிரதிப் பொதுமுகாமையாளருக்கு மானிப்பாய் பிரதேச சபையினால் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

இப்பகுதிக்கு மின்சாரம் வழங்குமாறு கடந்த காலங்களில் பல்வேறு பொது அமைப்புக்களாலும் கடிதங்கள அனுப்பப்பட்டபோதும் இற்றைவரை நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட அநேகமான பகுதிகளுக்கு மின்சாரம வழங்கப்பட்டுள்ள போதும் கட்டுடை கேலன்காமம் வீதி மட்டும் தொடர்ந்து இருளில் மூழ்கியுள்ளது.

எனவே, விரைவில் மேற்படி பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கு ஆவன செய்யுமாறும் அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்படப் பலரும் இந்த விடயம் தொடர்பாக மின்சாரசபைக்குக் கடிதங்கள் அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-10-90-185)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் 27.03.2004
சனிக்கிழமை நடைபெற்ற
23ஆவது பட்டமளிப்புவிழாவில் -

**திருமதி அம்பிகைபாலன் பிறேமா**

(ஆசிரியை, யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலை)

அவர்கள் பட்டப்பின் டிப்ளோமா பட்டம் பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டுவதுடன் அவர் மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சிறப்புற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

திரு.R.செல்லத்துரை மாஸ்ரர்
குடும்பத்தினர்.

தாவடி. (30267)(26-21-14-26)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

27-03-2004 இல் நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில்
முதுகலைமாணிப் பட்டம்பெற்ற எம் ஆசான்

**திரு.பொ.அருந்தவநாதன்**

அவர்களை மனமார வாழ்த்துகிறோம்.
மேலும் விஞ்ஞானமாணிப் பட்டம்பெற்ற எமது இரசாயனவியல் ஆசிரியர் **அ.தபேசன்** அவர்களையும்
பட்டப்பின் பொதுநிர்வாக டிப்ளோமா பட்டம்பெற்ற எமது கணக்கியல் ஆசிரியா **அ.சுபேசன்**
அவர்களையும் வாழ்த்துகிறோம்.

**SUBRA கல்வி நிறுவனம்**
சித்தன்கேணி.

(சி-341147) (26-21-14-26)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

காரைநகர், ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய மாணவி

**செல்வி பவிதா திருப்புகளூர்சிங்கம்**

அவர்கள் 2003 க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் 9A,1C பெற்றுச் சித்தியடைந்துள்ளார். ஆகவே, அவரையும் முக்கியமாக அவருக்கு ஆக்கமும் ஊக்கமுமளித்து கல்வியில் நெறிப்படுத்தய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

**சண் தொலைத் தொடர்புச் சேவை**
தொலைபேசி இல:
0602-213190, 0712-750923,
0777-554403. (30257)

*திக்கரை,களபூமி,*
*காரைநகர்.*

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 13 - 01 - 1915



உதிர்வு 29 - 02 - 2004

**அமரர் நல்லதம்பி இரத்தினம்**

(முன்னாள் நடத்துநர் இ.போ.ச)

திதி : பூர்வபக்க நவமி

குழந்தைப் பருவத்தில் தாயை இழந்தோம்
தாயைப் போல் உறவுதந்தீர்கள்
நாம் கல்வியிலே மேன்மையுற
உறக்கமின்றி உழைத்தீர்கள்
சுவையுணவை துறந்து - எமக்கு
அறுசுவை அமுதம் தந்தீர்கள்
மருமகளைப் பிள்ளை என அழைத்து
மகள் போல் உறவு காத்தீர்கள் - இந்த
பசுமையான நினைவுகள் - என்றும்
எம் உள்ளத்தில் வாழும் ஐயா
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

*இ.சர்வேஸ்வரன்*
*கோவிலாக்கண்டி மத்தி.*
*கைதடி.*
*(வலயக்கல்வி அலுவலகம் தென்மராட்சி)*

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(29690) (41)

# கேள்வி கோரல்

## யாழ்.அரசினர் பொதுவைத்தியசாலை நலன்புரிச் சங்க உணவகம் நடத்துவதற்கான விண்ணப்பம் 2004-2005

01-05-2004 ஆம் திகதி தொடக்கம் 30-04-2005 வரைக்கும் யாழ்.அரசினர் பொது வைத்தியசாலையில் தேநீர்ச்சாலை ஒன்றினை நடத்துவதற்குத் தகுதிவாய்ந்த அனைவரிடமும் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் நலன்புரிச் சங்கத்தால் 05-04-2004 வரை வழங்கப்படும். கேள்விப்பத்திரம் ரூபா 100/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் யாவும் 14.04.2004 காலை 10.00மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் நேரடியாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படலாம்.

மேலதிக விவரங்களுக்கு வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
வைத்தியசாலை நலன்புரிச் சங்கம்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். (சி-34153) (26)

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 - 05 - 1937



உதிர்வு 10 - 04 - 1995

**அமரர் ஆறுமுகம் ஜெயரத்தினம்**

(முன்னாள் உதவி முகாமையாளர், இலங்கை வங்கி )

திதி:30.03.2004

அன்போடும் பண்போடும் வாழ்ந்து மறைந்த
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனை இறைஞ்சும்:

*66/2, பருத்தித்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (30196)

- உங்கள் குடும்பத்தினர்.

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 - 06 - 1942



உதிர்வு 17 - 03 - 1997

**அமரர் செல்லையா சீவரத்தினம்** (கிளி)

(முன்னாள் ஊழியர், இ.போ.ச.)

திதி: 30-03-2004

எம்மை அன்பால் அரவணைத்த
அன்புத் தெய்வமே!
உங்களது உடல் மட்டும் எம்மைவிட்டு
அகன்றதே தவிர உள்ளமும் உருவமும்
எம்மிடந்தான் தொடர்ந்திருக்கும்.

*உங்கள் பிரிவால் துயருறும்:*

உரும்பிராய் வடக்கு. **அனைத்து குடும்பத்தினர்களும்.**

(30258) (26-21-14-18)

உ
சிவமயம்

## 2ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



**அமரர் கணபதிப்பிள்ளை சின்னப்பு**

தோற்றம் 04-12-1926
மறைவு 23-03-2002

திதி: பூர்வபக்க நவமி

*தன்னையே தரணியிலே அர்ப்பணித்து – தன்*
*மைந்தர்களை தரணியிலே தலைநிமிர உழைத்த*
*தெய்வமே!*
*மீளாத்துயில் கொண்ட நாளினை இந்*
*நாளில் நினைவு கூருகின்றோம்.*


அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சரசாலை வடக்கு.
சாவகச்சேரி. (30054) (26-14-39)

# கடவுளே

## குப்பி விளக்கு பத்தவைப்பதற்கு மண்ணெண்ண கூட இல்லாம நாம எப்படி வாழ?

அன்று




யுத்தத்தோட கொடும அத அனுபவித்த எமக்கு தான் தெரியும். தண்ணி இல்ல.லைட் இல்ல, ரோட்டால ஒரு பக்கம் போக முடியல, மருந்து வாங்க முடியல. சாப்பிட முடியல.பருக முடியல.

இன்று



ஆனா கடந்த ரெண்டு வருஷமா... ரோட்டுகள் திறந்தாச்சு - மின்சாரம் கிடைத்தது. கண்ணி வெடி இல்லாம போனது. கடைகள் திறந்தாச்சு. சாமான் வில குறைந்தது. சாப்பிட பருக முடிந்தது. எமக்கும் உண்டு களித்து வாழ உரிமை இருக்கிறது. அதற்கு தான் நாம நிலையான சமாதானத்துக்கு விருப்பம். நிலையான சமாதானத்த நிலைநாட்ட போராடும் ஐதேகட்சிக்கு எமது ஆதரவயும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு எமது ஆசிர்வாதத்தயும் தெரிவிக்கனும்.





நாட்டை வளமாக்க சமாதானத்தைத் தேர்ந்தெடுங்கள்.


## இடமாற்றம்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு கடந்த 15ஆம் திகதியில் இருந்து உள்ளக இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம-10-180)

# காரைநகரில் மிதிவெடிகள் அகற்றல்

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயச் சுற்றாடலிலுள்ள மிதிவெடிகள் மற்றும் வெடி பொருள்களை அகற்றும் பணியில் 'ஹலோட்ரஸ்ட்' நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டு எட்டு ஆண்டுகளுக்குப் பின்னரே இப பகுதியில் மிதிவெடிகள் அகற்றும் பணி மேற்கொள்ளப்படுகின்றது. இதுவரை காலமும் இப்பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் அச்சத்துடனேயே தமது கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தனர்.

கடந்த வாரம் பாடசாலை அதிபர், அரச அதிபரை யாழ்.செயலகத்தில் சந்தித்து மிதிவெடிகளை உடனடியாக அகற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக் கூறியதை அடுத்து இந்த மிதிவெடி அகற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வெடி பொருள்கள் அகற்ற ஆரம்பிக்கப்பட்ட அன்றைய தினமே வெடி பொருள்கள் சில பெரும் சத்தத்துடன் வெடித்ததாகக் கூறப்படுகின்றது. (ம-8-73)

## சமூக வலுவூட்டல் பயிற்சிப்பட்டறை

சமூக வலுவூட்டல் பயிற்சிப் பட்டறை அரச சார்பற்ற நிறுவனங்களின பிரதிநிதிகளுக்கு நேற்றுமுன்தினம் காலை யாழ்.வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் நடைபெற்றது.

'சமூக ஊக்கவியல் மற்றும் முகாமைத்துவம்' என்ற தொனிப் பொருளில் சமூக ஊக்கவியல், சமூகம் சார்ந்த நிறுவன முகாமைத்துவத்தின் ஆலோசகர் ராஜா சுஷிலா பயிற்சியை வழங்கினார். இலங்கையிலுள்ள 150 அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 250பிரதிநிதிகளுக்கு இந்தப் பயிற்சிநெறி வழங்கப்படவுள்ளது என்று ஆலோசகர் ராஜா சுஷிலா தெரிவித்தார். (ஒ-7)

## பசுக்கன்று வளர்ப்புத் தொடர்பான பயிற்சி வகுப்பு

பசுக்கன்று வளர்ப்பது தொடர்பான பயிற்சிச் செயலமர்வு இன்று கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெறும் செயற்கை முறைச் சினைப்படுத்தல் மூலம் பெறப்படும் பசுக்கன்றுகளைப் பராமரித்தல் மற்றும் பயன்பெறல் தொடர்பான இந்தப் பயிற்சிச் செயலமர்வு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ளது.

பயிற்சிச் செயலமர்வில் பசுக்கன்று வளர்ப்புத் தொடர்பான படக்காட்சியும் காண்பிக்கப்படவுள்ளது. (ஒ-11)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலய பிரதி அதிபராகக் கடமையாற்றும்

**திருமதி இரத்தினபாக்கியதேவி மகாரட்ணம்**

அவர்கள் தனது 32 ஆண்டுகால ஆசிரிய சேவையிலிருந்து இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்கின்றார். அவரின் சேவையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்.
T.P.No.:226-3427.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.
(C/34140)(34)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 27.03.2004 நடைபெற்ற 23ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்றவர்களான எமது அன்புக்குரிய

திரு.எஸ்.ஜெயரட்ணம Phd.(Honoris Causa)
திருமதி ஆர்.இருதயநாதன் M.Phil
திரு.ஆர்.எல்.குணரட்ணம Dip. in Edu.
திரு.எஸ்.கருணதாஸ் Dip. in Edu.
திரு.பி.என்.றொபின்சன M.B.B.S.
திரு.பி.ஜே.பிரதீபன் M.B.B.S.
திரு.எம்.ஜே.ஜேசுதாஸ் M.B.B.S.
திரு.ஐ.ஆர்.ரகுநாதன் M.B.B.S.
திரு.பி.ஜே.சி.தெய்வேந்திரன் B.Sc.
திரு.கே.ஜெயஸ்ரீ BFA
திரு.ஜே.றெஜினோல்ட் BFA
திரு.சற்.ஜே.பாலதாஸ் BFA

பாவலர் போற்றும் நவாலி என்னும் பதியினிலே பல்கலைக்கூடம் தன்னில் பட்டங்கள் பெற்ற பன்னிருவரைப் பாங்குடன் பாராட்டி வாழ்த்துவதில் பேருவகையடைகின்றோம்.

நவாலி சென்.பீற்றர் சனசமூக நிலையத்தினரும் பங்குமக்களும்.
(30191) (26)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 27.03.2004 சனிக்கிழமை நடைபெற்ற 23 ஆவது பட்டமளிப்பு விழாவில்

வலிகாம வலய ஆசிரிய ஆலோசகர்

**உயர்திரு. நாகலிங்கம் அரியபுத்திரன்**

(B.Ed.L.L.B.Attorney At Low M.Phil)

அவர்கள் கல்வி முதுதத்துவமாணிப்பட்டம் பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டுவதோடு அவரின் கல்விப் பணி சிறந்த முறையில் தொடரவும் சட்டத்துறைப்பணி சிறப்புறவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

கல்விகற்ற ஆசிரியர்களும், அன்பு நண்பர்களும்.
(30192)(38)

## இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி! தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி**

யாழ். குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021-222-2567

(16-19-21) (குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-33905)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

குருபரன் கல்வி நிறுவன விஞ்ஞான ஆசிரியர்

**திரு.பொன்னுத்துரை சற்குணநாதன்**

(B.Sc. (Hons) AGRI Dip.in.Ed.)

அவர்கள் (27.03.2004) சனிக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்வி முதுமாணிப் (M.Ed.)பட்டம் பெற்றதையிட்டு அவரையும் அவரது சேவையையும் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நிறுவன இயக்குநர் (திரு. அன்ரன்), ஆசிரியர்கள்.

புத்தூர் குருபரன் கல்வி நிறுவனம்.
(16-19-21) (30199)

# தயவுசெய்து ஒரு 10 நிமிடம்....

சீரும் சிறப்புமாய் கிராமம் தோறும் ஊர் கூடி தேர் இழுத்து மங்கலமாய் ஒரு காலம் வாழ்ந்த தமிழர் நாங்கள்

தமிழனை ஒடுக்க வேண்டும், கொன்றொழிக்க வேண்டும், எம் தாயகப் பூமியை அபகரிக்க வேண்டுமெனச் சிங்களப் பேரினவாதம் செய்த அட்டூழியங்களால் உறவிழந்து, சொத்திழந்து, ஊரைப்பிரிந்து, நேற்றுவரை சொந்த மண்ணில் வேற்றாள் போல் வாழும் அவமதிப்பையும் பெற்றோம்.

இப்பொழுது ஒரு மாபெரும் வரலாற்றுக்கடமை எம் முன்னே. அந்தக்கடமை என்னவெனச் சொல்ல விரும்புகின்றோம். தயவுசெய்து பொறுமையாக இறுதிவரை வாசியுங்கள். இது எந்த ஒரு கட்சியினதும் தேர்தல் பிரசாரம் அல்ல. உங்களைப்போல்தான் நாமும். எந்த ஒரு வேட்பாளர்களுக்காகவும் நாம் பேச வரவில்லை. ஆனால், காலம் எம்மை சிந்திக்க வைத்தது. சிந்தித்தோம்.... அதை உங்களுடன் பகிர விரும்புகின்றோம்.

கடந்த ஈராண்டாய் கொஞ்சம் நிம்மதி அனுபவிக்கின்றோமே?

நாம் அனுபவிக்கும் இந்தச் சமாதானம் உண்மையில் எதனால் வந்தது? ஆனையிறவில் சிங்களத்துக்கு விழுந்த அடியும் பொங்கு தமிழுக்காய்த் திரண்ட மக்கள் கூட்டமும் சென்ற தேர்தலில் நாம் தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவாய் அளித்த வாக்குகளுந்தான் இன்றைய சமாதானத்தைத் தோற்றுவித்தது.

ஆனாலும் இன்னமும் எதுவும் நிரந்தரமாகவில்லை. சிங்களம் எம் உரிமைகளை மீண்டும் மறுக்கும்போது போர் தொடங்கலாம் என்பதே யதார்த்தமாய் உள்ளது. உலகமோ இன்னமும் மதில் மேல் பூனையாகத் தான் அனைத்தையும் பார்த்துக்கொண்டு இருக்கிறது. முதலில் மக்களின் ஆதரவு உங்களுக்குத்தான் என்று நிருபியுங்கள், அதன் பின் உங்கள் உரிமைக் கோரிக்கைகளைப்பற்றிப் பார்ப்போம் என்று கூறுகிறது. அதனால்தான் எம் போராளிகளும் இந்தத் தேர்தலில் களமிறங்க வேண்டி வந்தது.

எங்கள் பிள்ளைகள் எத்தனை எத்தனை பேர் எங்களுக்காகத் தம்முயிரை ஈந்தனர்? எத்தனை இரத்தம் இந்த மண்ணின் விடிவிற்காகச் சிந்தப்பெற்றது? எத்தனை பிள்ளைகளின் அவயவங்கள் எங்கள் விடுதலைக்காகத் துண்டாடப்பட்டன? இத்தனையும் எம்மின விடியலுக்காக என்று மனமுவந்து செய்யப்பட்ட தியாகங்களல்லவா? இல்லை என்று யாராலாவது சொல்ல முடியுமா? அல்லது இல்லை என்று மறுப்பதற்குத்தான் எங்கள் மனங்களில் இடம் உண்டா? உண்மையில் நாம் ஒவ்வொருவருமே செய்திருக்க வேண்டிய கடமை அல்லவா இது? நாமோ செய்யவில்லை. சொந்தக்காரணங்கள் எத்தனையோ எம்மைப் போராடப்போக முடியாமல் தடுத்திருக்கலாம். ஆனால் எம் தாயகத்தின் ஆன்மாவைக் காப்பாற்றுவதில் நாமும் பங்களிக்கக்கூடிய அரிய, பெறுமதியான சந்தர்ப்பம் ஒன்று இன்று எமக்குக் கிடைத்துள்ளது.

உயிரைக்கொடுத்து எங்கள் பிள்ளைகள் பெற்றுத் தந்துள்ள இன்றைய வெற்றியை, மீட்டு எடுத்துள்ள தமிழர்களின் கௌரவத்தை, இந்தச் சமாதானத்தை காப்பாற்றவும் மேலும் போரோ, அதனால் வரும் உயிரிழப்புகளோ இன்றி எங்கள் உரிமைகளை அடைவதற்குக் கிடைத்துள்ள ஓர் இறுதிச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளவும் வழி சமைக்கக்கூடிய இவ்வரிய வாய்ப்பு கிடைத்துள்ளது. அதுவும் அதை நாங்கள் இடும் ஒரு புள்ளடியால் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது.

ஆம், 2004 ஏப்ரல் 02ஆம் திகதி அன்று மட்டும் எம் சொந்த அலுவல்களைச் சிறிது நேரம் ஒத்திப்போட்டு நாம் நேர்மையுடன் சிந்தித்து இடப்போகின்ற ஒரு புள்ளடி நிரந்தர சமாதானத்திற்கும் நாங்கள் இழந்துபோன உரிமைகளைப் போரின்றிப் பெறுவதற்கான வழியைத் திறப்பதற்கும் நாம் இடும் அத்திவாரக்கல் ஆகும் அல்லவா?

17,000இற்கு மேற்பட்ட எங்கள் செல்வங்களின் உயிர்களாலும் இன்னும் பல்லாயிரம் பிள்ளைகளின் குருதியினாலும் கட்டப்பட்டு வரும் எங்கள் தேசத்திற்கு எங்கள் வாக்குகளால் பலம் சேர்க்க முடியுமல்லவா?

*இன்று உங்கள் வாக்குகளைக்கேட்டுப் பலரும் உங்களிடம் வருகின்றார்கள். கொஞ்சம் யோசிப்போம்....*

*அமைச்சராய் இருந்தவரும் வருகின்றார்.....*

*இவர் அமைச்சராய் இருந்து எங்களுக்காய் என்ன செய்தார்? அரசாங்கம் வழமையாகக் கொடுத்த வேலை வாய்ப்பினையெல்லாம் தங்களிடம் வந்து பெறச்சொன்னார். தாங்களே வேலை தந்தது போல் காட்டிக்கொண்டார். வடக்குக்கு வந்த அபிவிருத்தி நிதியெல்லாம் இவர்களின் கைக்குப்போனது. இவர்கள் தங்கள் நலனுக்காய் எங்களுக்கு றோட்டுப்போடுவது முதல் கோயில் கட்டுவது வரை செய்வார்கள்தானே?*

*ஆனால் உருப்படியான ஏதாவது அபிவிருத்தி?*

*ஒரு தொழிற்கூடம்? ஒரு கைத்தொழில் முயற்சி? இல்லவே இல்லை! அப்படிச் செய்தால் தமிழன் முன்னேறி விடுவானே. அப்படிச்செய்ய இவர்களின் சிங்கள எஜமானர்கள் அனுமதிப்பார்களா என்ன? தமது எஜமான விசுவாசத்தை மீறி இவர்கள்தான் ஏதும் செய்து விடுவார்களா*

*சிங்களப்பேரினவாதிகள் தமக்கு விசுவாசமாக இருக்கக்கூடிய ஒருவரை தமிழர்களின் தலைவராக்க விரும்பினார்கள். இவர் கிடைத்தார். காசைக்கொட்டி அவரை தலைவராக்க முயல்கிறார்கள். இவரும் தமிழ்மானம் விற்றுப் பதவி பெறுவதற்காய் "அபிவிருத்தி" பேசி உங்களிடம் வருகின்றார்.*

*சங்கதி கூறியும் ஒருவர் வருகின்றார் ....*

*இவரின் சங்கதியும் ஒன்றும் குறைந்ததல்லவே. தமிழருள் ஒரு நடுநிலையாளனுக்கோ அல்லது ஒரு பொதுமகனுக்கோ அக்கறை காட்டாத, நேற்றுவரை இன்னல் மட்டுமே செய்த இராணுவம் ஒரு தமிழனான அவருக்குப் பாதுகாப்புக் கொடுக்கின்றது என்றால்....இவர் யார் என்பது புரிகின்றதல்லவா?*

*தந்தை செல்வாவின் பெயரைக் கூறிக்கொண்டு வருகிறார். அன்று தந்தை செல்வாவையே இவர் பழித்தது எமக்கு மறந்து போகுமா?*

*ஐயா, அம்மா, எமக்காக உயிரையும் கொடுக்கின்றது ஒரு கூட்டம். அவர்களின் குருதியில் குளிர்காய்ந்து கொண்டு வயிறு வளர்ப்பதுடன் புழுதி வாரித் தூற்றவும் செய்கிறார்கள் இவர்கள். நீங்களே சிந்தியுங்கள். இனங்காணுங்கள்.*

*இவர்களால் சமாதானத்தையோ தமிழரின் உரிமைகளையோ பெற்றுத்தர முடிந்ததில்லை. தரவும் முடியாது. அல்லது எப்போதாவது அதற்காக முயன்றாவது இருக்கிறார்களா? தமிழனைக் காட்டிக்கொடுக்கவும் போர் தொடங்கினால் அதை வைத்து தமது சிங்கள எஜமானர்களிடம் தமது அடிமை விசுவாசத்தை நிரூபித்து அதிக சலுகைகள் பெறவும்தான் இவர்களால் முடியும்.*

*வாக்களிப்பதும் அதை அளிக்காமல் விடுவதும் எங்களின் உரிமை. ஆனால், இந்தத் தேர்தலில் எங்கள் வாக்குகளை வீணாக்குவதும் இவர்களுக்குப் போடுவதும் மனச்சாட்சிக்கு விரோதமல்லவா? எம் தாயகத்தின் ஆன்மாவை நாங்கள் கை விட்டுவிடலாமா?*

தேசியத்திற்காய் களமிறங்கியுள்ள வேட்பாளர்கள் சிலரிலும் உங்களுக்கு அபிமானம் இல்லாமல் இருக்கலாம். அது உங்களின் சுதந்திரம். உங்களை அணுகும் இவர்களில் பிழை கூட இருக்கலாம். உடலில் ஒரு நோய் என்பதற்காக உயிரை நாம் உதாசீனம் செய்வதில்லை அல்லவா? உடன் பிறந்தார் யாரும் தவறேதும் செய்தாலும் எங்கள் தாயைக் கை விடுவோமோ?

இதை வாசித்து நியாயம் என உணர்ந்தவர்களே! நாங்கள் எங்கள் கடமையைச் செய்வோம். எம் அடுத்த சந்ததிக்கேனும் சமாதானத்தையும் சுதந்திரத்தையும் சுபீட்சமான வாழ்வையும் வழங்குவோம்.

நாங்கள் இருக்க ஒரு வீடு வேண்டும் என்றால் தமிழினம் வாழ ஒரு நாடு வேண்டும். அதற்கு ஏப்ரல் 02 இல் எங்கள் வாக்குகள் தாயகத்திற்காய் விழ வேண்டும்.

**ஜனநாயகத்திற்கான தமிழ் மக்கள்**

எம்முள் எழுந்த இச்சிந்தனையை உரக்கச்சொல்லும் ஒரு சிறு முயற்சி இது. பெரிய முயற்சியாய் செய்ய எம்மிடம் வளம் இல்லை.

மனிதப்பண்புக்கும் மனச்சான்றுக்கும் உரித்தான மக்களே! இதை அடுத்தவருக்கும் வாசிக்கக்கொடுத்தால் இது பெரு முயற்சியாக மாறும். இயன்றவரை பிறருக்கு விளங்கப்படுத்தினாலோ உன்னதமாகும்.

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2004
# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு






## யாழ்.மாவட்ட வாக்காளப் பெருமக்களே!

- ★ தமிழினத்தின் கொள்கைகளை அங்கீகரிக்க நடத்தப்படும் தேர்தல் என்பதால் தமிழினத்தின் கொள்கை கூட்டமைப்பின் கொள்கை என்பதை வெளிப்படுத்தி வாக்களிப்போம்.
- ★ விடுதலைப் போராட்டத்தின் உண்மையை உலகுக்கு உணர்த்தக் கிடைத்த வாய்ப்பாக இத்தேர்தலைப் பயன்படுத்தி கூட்டமைப்புக்கு வாக்களிப்போம்.
- ★ இனத்தை விற்கும் போலிகளைத் தோற்கடிக்கக் கூட்டமைப்புக்கு வாக்களிப்போம்.
- ★ மாமனிதர் குமாரின் வழிசெல்லும் கொள்கையாளர்களுக்கு வாக்களிப்போம்.
- ★ தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் என்பதை உலகுக்கு உணர்த்த வாக்களிப்போம்.



மாமனிதர்
குமார் பொன்னம்பலத்தின் புதல்வர்
திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



விடுதலைப் போராட்டத்துடன் தன்னை
இணைத்து பணிபுரியும்
திரு.சீ.வீ.கே.சிவஞானம்.

கூட்டமைப்பின் எமது அணி வேட்பாளர்களாகப் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரிக்குமாறும் அவர்களை பெருவெற்றி பெறச் செய்யுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

## கூட்டமைப்பின் வெற்றி தமிழினத்தின் வெற்றி

மாமனிதர்
**குமார் பொன்னம்பலம்**

| | | |
|---|---|---|
| **இலங்கைத் தமிழரசுக் கட்சி** | | X |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ~~5~~ | 6 | 7 | 8 | ~~9~~ | 10 |
| 11 | 12 | | | | | | | | |

மாமனிதர் குமார் பொன்னம்பலம்
ஞாபகார்த்தக்குழு
வண்ணார்பண்ணை - யாழ்.

## ஜீ.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் 3ஆயிரத்துக்கும் அதிகமானோர் 8'ஏ'சித்தி

கொழும்பு,மார்ச்30

அண்மையில் வெளியான ஜீ.சி.ஈ. சாதாரணதர தரப்பரீட்சை முடிவுகளின படி 3 ஆயிரத்து 38 மாணவர்கள் எட்டு பாடத்திலும் 'ஏ' சித்தி பெற்றுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

சிங்கள மொழிமூலம் பரீட்சைக் குத் தோற்றிய பரீட்சார்த்திகளில் ஆயிரத்து 726 மாணவிகளும், 980 மாணவர்களும் அனைத்துப் பாடங் களிலும் 'ஏ' சித்தி பெற்றுள்ளனர்.

தமிழ் மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளில் 211 மாணவிகளும், 122 மாணவர்களும் அனைத்துப் பாடங்களிலும் 'ஏ' சித்தி களைப் பெற்றுள்ளனர்.

ஜீ.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சை யில் தோற்றிய 2 லட்சத்து 62 ஆயிரத்து 233 பாடசாலைப் பரீட் சார்த்திகளில் ஒரு லட்சத்து 20 ஆயிரத்து 529 பரீட்சார்த்திகள் ஜீ.சி.ஈ உயர்தரத்தில் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர் எனப் பரீட் சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரி வித்துள்ளன. (ப-8)

## வடமராட்சியில் புகையிலை அறுவடை

வடமராட்சி,மார்ச்30

வடமராட்சிப் பிரதேசத்தில் புகை யிலை அறுவடை ஆரம்பமாகியுள்ளது.

தரமான புகையிலைச் செடி ஒன்று 60ரூபாவாகவும், சராசரியான புகையிலைச் செடி ஒன்று 50ரூபா வாகவும் விற்பனையாகிறது.

இம்முறை புகையிலைச் செய்கை இலைச்சுருட்டி நோயினால் அதிக மாகப் பாதிக்கப்பட்டுள்ளது. (ம-8-173)

## மனித உரிமைகள் தொடர்பான சட்ட உதவிகள்

கோப்பாய்,மார்ச்30

மனித உரிமைகள் நிலையத்தி னால் (IHR) குடாநாட்டில் உள்ள பலதரப்பட்ட மக்களுக்கும் இலவச சட்ட ஆலோசனைகள், மனித உரிமை கள் தொடர்பான விழிப்புணர்வுக் கல்வி என்பன வழங்கப்பட்டு வருவ தாக நிலையத்தின் சட்ட அலுவலர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக இந்த நடவடிக்கைகள் இடம்பெற்று வருவ தாகவும் இது தொடர்பான உதவிகள தேவைப்படுவோர் ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கு அருகிலுள்ள மேற்படி நிலையத்தின் கிளை அலு வலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள் ளார். (ம-10-72)

## 'பசுந்தோகை' சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம்,மார்ச்30

யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட மாணவர் ஒன்றியத்தினால் வருடா வருடம் வெளியிடப்படும் 'பசுந்தோகை' சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு விவசாயபீட பிரதான மண்ட பத்தில் இடம்பெறவுள்ளது. (ம-8)

## ஆச்சிரமத்துக்கு உதவி

வடமராட்சி,மார்ச்30

வடமராட்சி வதிரி பரமானந்தா முதியோர், சிறுவர் ஆச்சிரமத்திலுள்ள சிறுவர்களுக்கு பருத்தித்துறை ஹாட் லிக் கல்லூரி சாரண மாணவர்கள கற்றல் உபகரணங்களையும், உண வுப் பொதிகளையும் வழங்கினார்கள்.

சாரணர் ஜனாதிபதி விருதுத் திட்டத்தின் கீழ் இவை வழங்கப் பட்டன.

இவற்றை வழங்கும் வைபவத்தில ஹாட்லிக் கல்லூரி அதிபர் எஸ்.பத்ம நாதன் உட்பட ஆச்சிரம அறங்காவ லர் சபையினரும் கலந்து கொண்ட னர். (ம-8-173)

## வாள்வெட்டில் இளைஞர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,மார்ச்30

நீண்டநாள் தகராறு வாள்வெட்டில முடிந்ததில் இளைஞர் ஒருவர் படுகாய மடைந்தார்.

நாவாந்துறையைச் சேர்ந்த க.சுரேஸ்குமார் (வயது-24) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் நாவாந துறைப் பகுதியில் பிணக்கு ஒன்றி னைச் சமரசம் செய்து வைப்பதற்கா கச் சென்றபோது வாள்வெட்டுக்கு இலக்காகித் தலையில் படுகாய மடைந்த இந்த இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக யாழ்.பொலீஸ் நிலைய குற்றவியல் பிரிவில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-8-7)

## ஈரவிழிகளுடன் ஈராண்டு

## திருமதி றமிலா



மலர்வு
22-02-1967



உதிர்வு
30-03-2002



பூப்போன்றவளே!
இன்முகம் காட்டி
இனிய மொழி பேசி
வைகறைக் குயிலென
வையகத்தே வாழ்ந்தாயம்மா
அன்று வந்த விடியலிங்கு
ஏன் இந்த வெந்துயரம்?
இந்த முகம் அழியுமென்று
எந்த மனம் நினைத்ததம்மா?
காலங்கள் புரண்டோடினாலும்
கண்ணீருடன்
உன்நினைவுகளுடன்....

நாகம்மாள் வீதி,
உடுவில்,
சுன்னாகம்.

அம்மா,
தம்பி - கொலின் (கனடா),
மகன் - ஜோகான்சன்,
மகள் - றேச்சா.

(29989) (16-18)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
15
-
03
-
1957



உதிர்வு
01
-
03
-
2004

### அமரர் காத்தி சந்திரன்

(அப்பையா)

ஆலயத்தில் தினமும் தொண்டு செய்து
அன்பினையும் பண்பினையும்
அறத்தையும் அறிவையும்
எமக்கு ஊட்டிய தந்தையே!
இன்று எம்மை எல்லோரையும்
தவிக்கவிட்டு எங்கே சென்றீர்கள்?
உங்கள் முகத்தை நாங்கள் இனி
எங்கே காண்போம்? எங்கள்
அன்புத் தந்தையே! நீங்கள்
சென்ற ஆலயம் எங்கே?
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

இன்று (30-03-2004) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் நிகழ்கின்ற மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


நவாலி வடக்கு,
மானிப்பாய்.

- அன்பு மனைவி,
பிள்ளைகள்.

(30179) (26-14-39)



தந்தை செல்வா அவர்களின்
106 ஆவது பிறந்ததின



## சர்வமதப் பிரார்த்தனை

இடம்: தந்தை செல்வா சதுக்கத்தில் அமைந்துள்ள
செல்வா நினைவாலயம் - யாழ்ப்பாணம்.

காலம்: நாளை (31.03.2004) புதன்கிழமை
காலை 9.00 மணிக்கு.

தந்தை செல்வா அபிமானிகள், அன்பர்கள்
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

- தந்தை செல்வா அறங்காவற் குழு.

முக்கிய குறிப்பு:
யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தால் நடத்தப்படும் தந்தை செல்வாவின் 106 ஆவது பிறந்ததின நினைவுகூரல் வழிபாடு சுண்டுக்குளி சென். ஜோன்ஸ் ஆலயத்தில் மாலை 4.00 மணிக்கு நடைபெறும்.


(30194) (34-14-39)




வெற்றி இலக்கம் 6



வெற்றி இலக்கம் 10



வெற்றி இலக்கம் 12



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

தமிழ்த் தேசியத்தை காப்பாற்றிடுவோம்.

தமிழர் தாயகத்தை மீட்டெடுப்போம்.

தமிழரில் எதிரணியே இல்லாத சபையை அமைத்திடுவோம்.

அரசை தீர்மானிக்கும் சக்தியாக மாற்றிடுவோம்.

**மாற்றிடும் சக்தி**

- தென்மராட்சி வணிக மன்றங்களின் ஒன்றியமும் மக்களும்.

---


## ஓயாத தமிழ்ப் பேரலையாய் எழுக!
## ஒன்றுபட்டுத் தமிழினத்தின் உரிமையினை வெல்க!!

வன்னிச் சமர்க்களத்தில் நின்று வாகைசூடியோரை
தேர்தல் களத்திலும்
வாகைசூட வைப்பீர்!



**கி.சிவநேசன்**

| | | |
|---|---|---|
| (வீடு) | X | 4 |



**சொலமன் சூ.சிறில்**

| | | |
|---|---|---|
| (வீடு) | X | 11 |

கூட்டுறவாளர்களாக.....

தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களாக.....

போர் எழுச்சிக் குழுவினராக.....

எல்லைப்படை வீரர்களாக.....

மண்ணினதும் மக்களினதும் விடுதலைக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர்கள்.

**இவர்களுக்கு வாக்களிப்பது எங்கள் கடமையல்லவா?**

- தமிழ்த் தேசிய நலன்காக்கும் சபை, யாழ்ப்பாணம்.



# செய்ததைச் சொல்கின்றோம்!

**(1) யுத்தத்தால் செயலிழந்துபோன அரச திணைக்களங்களுக்கு மீண்டும் உயிரூட்டினோம்.**

உதாரணம் (1) உள்ளூராட்சி சபைகளுக்கு புத்துயிர் ஊட்டினோம்.
(2) தொலைத்தொடர்பு மின்சார வசதிகளை ஏற்படுத்தினோம்.
(3) மாந்தை உப்புக் கம்பனி, வடகடல் கம்பனி என்பவற்றை செயற்படவைத்தோம்.
மேலும் (4) மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்.
(5) காலநிலை அவதான நிலையம்


எரிக்சொல்ஹெய்ம் குழுவினர்

(6) மீன்பிடித் திணைக்களம்
(7) நீதிமன்றங்கள்
(8) மதுவரித் திணைக்களம்
(9) பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
(10) விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் ஆகியவற்றை செயற்படவைத்தோம்.

**(2) தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி இளைஞர், யுவதிகளுக்கு வாழ்வளித்தோம்.**

உதாரணம் (1) அரச திணைக்களங்களில், கூட்டுத்தாபனங்களில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்பினோம்.
(2) சமுர்த்தி என்னும் வறுமைநிவாரண செயற்திட்டம் எமது பிரதேசத்திலும் அமுல்படுத்த வழிவகுத்தோம்.
(3) வேலையற்ற பட்டதாரிகள் 3500இற்கு பேருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கினோம்.
(4) சேவை அடிப்படையில் இருந்த சுகாதாரத் தொண்டர்கள் 1000க்கு மேற்பட்டோருக்கு மாதாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் வழங்கினோம்.
(5) 1200 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கினோம்.
(6) 1000இற்கு மேற்பட்ட அபிவிருத்தித் தொண்டர்களை நியமித்து தொழில்வாய்ப்புகளை உருவாக்கினோம்.
(7) போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவை உருவாக்கி வீதிப் போக்குவரத்து ஒழுங்கைப்பேணினோம்.
(8) மீளக்குடியமர்வுகளை ஊக்குவித்தோம்.
(9) சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்கினோம்.

**(3) அறிவுலகின் கதவுகளை அகலத்திறந்தோம்.**

உதாரணம் (1) தகவல் தொழில்நுட்பப் பூங்காவை உருவாக்கினோம்.
(2) கல்வியியல் கல்லூரியை நிறுவினோம்.
(3) உயர் தொழில்நுட்ப நிறுவனத்தைச் செயற்படச் செய்தோம்.
(4) திறந்த பல்கலைக்கழகம் மீளச்செயற்பட வழிவகுத்தோம்.
(5) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சட்டபீடம் திறக்க வழி வகுத்தோம்.
(6) பாடசாலைகளை புனர்நிர்மாணம் செய்தோம், கணனிகள் வழங்கினோம்.

**(4) கல்வித்துறையை விருத்தி செய்யப் பாடுபட்டோம்.**

உதாரணம் (1) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விசேட அனுமதியின் கீழ் மாணவர்கள் மேலதிகமாக உள்வாங்கப்பட நடவடிக்கை எடுத்தோம்.
(2) யாழ். மாவட்டத்தின் கல்வி நிர்வாகப் பணிகளை விரிவாக்கினோம்.
(3) முன்பள்ளி நிர்வாகங்களை ஒழுங்குபடுத்தி முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பு பணம் கொடுத்து ஊக்குவித்தோம்
(4) பாடசாலை மாணவர்களை அகில இலங்கை அளவிலான போட்டிகளில் பங்குபெற வழிவகுத்தோம்.
(5) பாடசாலைகளின் கல்விசாரா செயற்பாடுகளுக்கும் ஊக்கம் அளித்தோம்.
(6) விளையாட்டுத்துறையை ஊக்குவித்தோம்.

**(5) உள்ளூர் உற்பத்திகளுக்கு ஊக்கம் கொடுத்தோம்.**

உதாரணம் (1) விவசாயிகளுக்கு ஊக்கமளித்தோம்.
(2) மீனவர்களின் இடர்கள் களையப் பாடுபட்டோம்.
(3) சந்தைவாய்ப்புக்களை அதிகரித்தோம்.
(4) நிவாரணங்கள் பெற்றுக்கொடுத்தோம்.
(6) சமூகத்தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்தோம்.


நோர்வே அனுசரணையாளர் எரிக்சொல்ஹெய்ம் குழுவினர் யாழ்ப்பாணம் வந்து நின்றபோது ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்த குழுவினரைச் சந்திந்தித்துப் பேசினர்.

**(6) படையினரில் சிலர் மேற்கொண்ட அத்துமீறல்களை அம்பலமாக்கினோம்**

உதாரணம் (1) செம்மணிப் புதைகுழிகளை அம்பலப்படுத்தினோம்.
(2) பாலியல் வல்லுறவுச் சம்பவங்களை வெளிக்கொண்டு வந்தோம்.
(3) படையினரால் கைதாகிக் காணாமற் போனவர்களுக்காக உரத்துக்குரல் எழுப்பினோம்.
(4) படையினரால் கைதான அப்பாவிகளின் விடுதலைக்கு உதவினோம்.
(5) இலவச சட்ட உதவிகள் வழங்கினோம்.

**(7) இந்து ஆலயங்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் புனர்நிர்மாணம் செய்ய உதவினோம்.**

# சொல்வதைச் செய்வோம்!

- **இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண புதுவேகத்துடன் செயற்படுவோம்.**

**சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் யுத்தத்தை நிரந்தரமாக நிறுத்தி பேச்சுக்களைத் தொடர்வோம்.
ஜனநாயகத்துடன் கூடிய சமாதானத்தை நிலைநிறுத்துவோம்.
மத்தியில் கூட்டாட்சியுடன் மாநில சுயாட்சியை காண்போம்.**

- **தாயகப் பிரதேச அபிவிருத்திப் பணிகளை துரிதமாக்குவோம்.**

**வீதிகள் மற்றும் சமூக உள்கட்டமைப்புக்களை உடனடியாகப் புனரமைப்புச் செய்வோம்.
சனசமூக நிலையங்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புகளின் சுயாதீன செயற்பாட்டை உறுதிப்படுத்துவோம்.
இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வாய்ப்புகளை உருவாக்குவோம்.
இந்திய, தமிழக அரசுகளுடன் பேச்சு நடத்தி மீனவர்களின் தொழில் வாய்ப்பைப் பேணுவோம்.
உள்ளூர் உற்பத்திகளுக்கு சந்தைவாய்ப்புகளை பெருக்குவோம்.**

- **அன்றாடப் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வை பெற்றுத்தருவோம்.**

**நிரந்தர சமாதானம் நிலைபெறும் வரை உலருணவு நிவாரணம் தொடரச் செய்வோம்.
தொண்டர்களாக சேவையில் ஈடுபட்டுள்ளவர்களை நிரந்தர சேவையாளர்களாக நியமனம் செய்விப்போம்.
மூடிக்கிடக்கும் தொழில் நிறுவனங்களை மீளவும் செயற்பட வைப்போம்.**

- **சொந்த மண்ணில் சுகவாழ்வு காண்பதற்காக.**

**சட்டவிரோத வரி அறவீடுகள், கப்பம் வசூலிப்புகள் போன்றவற்றுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்.
சட்டம், ஒழுங்கு என்பவற்றை நிலைநிறுத்துவோம்.**

- **மீளக் குடியமர்வுகளை ஊக்குவிப்போம்.**

**உள்ளூரில் இடம்பெயர்ந்துள்ளவர்களை சொந்த மண்ணில் குடியமர்த்த முயற்சிப்போம்.
இடம்பெயர்ந்தவர்களுக்கான மீள்குடியமர்வு ஊக்குவிப்புக்களை பெற்றுக்கொடுப்போம்.
கட்டம் கட்டமாக அதியுயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குவோம்.**

- **வன்னி மக்களின் மனக்குறை போக்குவோம்.**

**ஜனநாயக அரசியல் சூழலில் பிரதிபலிப்பு வன்னி மண்ணையும் எட்டச்செய்வோம்.
சுதந்திர ஜனநாயக சூழல் உருவாக்க உழைப்போம்.**


பிரிட்டிஷ் தூதருடன் செயலாளர் நாயகம்.

## இவற்றின் மூலமாக மக்கள் நிம்மதியான வாழ்வை உறுதிப்படுத்துவோம்

## வீணையின் நாதம் மக்களின் ஆணையாக இசைக்கட்டும்

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)**

X

# இனப்பிரச்சினை...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்பகுதிக்குள் கல்முனை (தமிழ்) பாண்டிருப்பு, பெரிய நலாவணை, நற்பட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, காரைதீவு, மல்வத்தை, சொறிக்கல்முனை, சவளக்கடை, நாவிதன்வெளி, அன்னமலை ஆகிய முக்கிய தமிழ்க் கிராமங்கள் அடங்குகின்றன. கடந்த காலத் தேர்தல்களில் (1977, 1989, 2000, 2001) தெரிவுசெய்யப்பட்ட திகாமடுல்ல தமிழ்ப்பிரதிநிதி அம்பாறை மாவட்டத் தென்பகுதியில் இருந்தே தெரிவானார். இதனால், அம்பாறை மாவட்ட வடபகுதி, கல்முனைப் பகுதியைத் தளமாகக் கொண்ட தமிழர் ஒருவர் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்படவேண்டும் என்ற நிலைப்பாடு மேலோங்கி நிற்பதைக் காணலாம். இவ்வாறு தெரிவுசெய்யப்படாதவிடத்து தமிழருக்குக் கிடைக்கும் தேசியப்பட்டியலில் ஓரிடம் அம்பாறை மாவட்டத்திற்கு ஒதுக்கப்படவேண்டும் என்பது மக்கள் கோரிக்கை என்று பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் மூவினங்கள் வாழ்ந்து வரும்போதும் வெவ்வேறு அரசியல், பொருளாதார நிகழ்ச்சித் திட்டங்களை அமைத்துச் செயற்படுகின்றன. முஸ்லிம்கள் இம்மாவட்டத்தை மையமாக வைத்துத் தமது அரசியல் பொருளாதார சமூக செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். தென்கிழக்குப் பல்கலைக்கழக அமைப்பு கல்முனை மாநகரசபை உருவாக்கம் போன்றன முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கு முக்கியமான செயறறிட்டங்களாகும். மேலும் கரையோர மாவட்ட உருவாக்கம் முக்கிய கோரிக்கையாக உள்ளது. தமிழர்கள் குடித்தொகை நிலையிலும், சமூக பொருளாதார நிலையிலும் மூன்றாம் இடத்தைப் பெற்றிருக்கின்றனர். அபிவிருத்தியிலும், புனர்வாழ்விலும் தனக்குரிய பங்கு கிடைப்பதில்லை எனவும் ஏதும் கிடைப்பதாயின் அது மிகப்பெரும் பிரயத்தனத்தின் மூலமே அரைகுறையாகக் கிடைப்பது எனவும் அதன் பலன் முழுமையாகக் கிட்டுவதில்லை எனவும் மனம் நொந்துள்ளனர். கல்முனைத் தமிழ் உதவி அரச அதிபர் பிரிவு 14 வருடத்திற்கு மேலாகியும் இன்னமும் தரமுயர்த்தப்படவில்லை.

காரைதீவு, நாவிதன்வெளி, ஆலையடிவேம்பு இன்னும் பிரதேச செயலகங்களாகத் தரம் உயர்த்தப்படாமலும் இவற்றிற்குரிய பிரதேச சபைகளும் உருவாக்கப்படாமலும் உள்ள நிலையைக் காணலாம். நாவிதன்வெளி உதவி அரச அதிபர் பிரிவுக்குள் தமிழ்க கிராமங்கள் முழுவதும் கொண்டு வரப்படாமல் ஒருபகுதித் தமிழ்க் கிராமங்கள் சம்மாந்துறைப் பிரதேசச் செயலகத்திற்குள் உட்படுத்தப்பட்டிருப்பது பிரச்சினைக்குரியதாகும். தமிழ்பேசும் கரையோர வலயத்தில் உருவாக்கப்பட்ட மூன்று கல்வி வலயங்களும் முஸ்லிம் பாடசாலைகளைப் பெரும்பான்மையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன. (கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று) இவ்வலயத்தில் 35 வீதம் தமிழர்களாக இருந்தும் தமக்கொரு கல்வி வலயம கிடைக்கவில்லை என்பது பெருங் குறையாகவும் தம் அபிவிருத்திக்குத தடையாகவுள்ளதாகவும் தமிழ்மக்கள கருதுகின்றனர்.

பல்வேறு நிறுவன இட அமைவுகளில் தமிழர் பிரதேசங்கள் தெரிவு செய்யப்படாமல் இருப்பதும் அரச நியமனங்களில் தமிழர் புறக்கணிக்கப்படுவதும் நிர்வாகத்தில் தமிழரும் தமிழும் உரிய இடத்தைப் பெறாமல இருப்பதும் இங்கு வாழும் தமிழர்களை மனநெருக்கடிக்குள்ளாக்கும் நிலைமைகளாகும். இம்மாவட்டத்தில் ஏனைய இனங்களிலும் பார்க்கத தமிழினம் கூடுதலாகப் பாதிக்கப்பட்டிருந்தபோதும் புனர்வாழ்வு நிலையில், கவனிப்பாரற்று இருப்பதும், பல கிராமங்கள் இன்றும் கைவிடப்பட்டநிலையில் இருப்பதும் தமிழர் பிரச்சினைகளாகும்.

சிங்கள மக்கள் அம்பாறை மாவட்டத்தை மொழி அடிப்படையில் இரு மாவட்டங்களாகப் பிரிப்பதில் உடன்பாடு கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. இவர்கள் தம் பொருளாதார நடவடிக்கைகளை மேலும் கரையோரம் நோக்கி நகர்த்தி கரையோரப்பகுதிகளில் மீன்பிடித்தொழிலை விருத்திசெய்து முன்னேற்றம் காணவிரும்புகின்றனர். தீகவாபி பிரதேச அபிவிருத்தியும் இவர்களின் செயற்பாட்டில் முன்னுரிமை பெறுகிறது.

2004 தேர்தல் மூலம் இங்கு வாழும் மூவினமும் தத்தம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முற்படும் நோக்கில் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர். இலங்கை அரசியலில் இம்மாவட்டத்தேர்தல் பெறுபேறு பலவழிகளில் மிகமுக்கிய மானதெனக் கொள்ளலாம். ★

# புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தரப் பொங்கல் ஞாயிறன்று

கிளிநொச்சி,மார்ச்30

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி, புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.


நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை விளக்குவைக்கும் நிகழ்வு இடம்பெற்று, விசேட பூசைகள் நடைபெற்று வருகின்றன. பண்டம் எடுக்கும் வைபவம் மீசாலை, புத்தூர்ச் சந்தி பண்டமரவடியில் இருந்து எதிர்வரும் 3ஆம் திகதி ஆரம்பமாகி ஏ-9 வீதியூடாக மறுநாள் ஆலயத்தைச் சென்றடையும்.

அடியார்களின் நன்மை கருதி போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் தொடக்கம் பொங்கல் தினமான எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை வரையும் தினமும் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப் படும்.

(எ-10)





திரு.கி.சிவநேசன்

வெற்றி பெற வாழ்த்துகிறோம்

கைதடி மக்கள்.



## நலம்பெறப் பிரார்த்திக்கின்றோம்



குறுகிய காலமே அமைச்சராக இருந்து எம் மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றிய முன்னாள் இந்து சமய கலாசார அமைச்சர்

**திரு.தி.மகேஸ்வரன்**

அவர்கள் அராஜகர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கானதாக அறிந்து மிகவும் மன வேதனையடைவதுடன் இவ்வராஜக நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

முன்னாள் அமைச்சர் திரு. தி.மகேஸ்வரன் அவர்கள் விரைவில் பூரண சுகமடையவும் பொதுவாழ்வில் வெற்றிவாகை சூடி அவர்தம் சேவையைத் தொடரவும் எம் பெருமான் ஸ்ரீசுப்பிரமணியப் பெருமானைத் தினம்தினம் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலனசபை,
ஸ்ரீசுப்பிரமணியசுவாமி கோயில்,
தோப்புக்காடு, காரைநகர்.

(30274)(14-26)



## மனமுவந்து வாழ்த்துகின்றோம்

யா/சிதம்பராக் கல்லூரி, வல்வெட்டித்துறை

க.பொ.த.(சா.த.) பரீட்சை - 2003

பரீட்சைக்குத் தோற்றியோர் - 27 பேர்

க.பொ.த. (உ.த.) வகுப்பிற்குத் தகுதிபெற்றோர் - 10பேர்

4A (ஒருவர்) - த.சிவராம்

2A (மூவர்) - இ.ரௌத்திரி, உ.வசந்தகுமார், இ.சுரேன்

A (நால்வர்) - சி.வராகினி, ச.வசந்த், ப.சிவமுருகன், இ.கஜன்

உயர்தரத்திற்குச் சித்திபெற்ற இருவர் சி.அருள்தாஸ், உ.விமலன்

*மேற்படி பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் மீண்டும் பாடசாலையை உயர்நிலைக்குக் கொண்டுவருவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அதிபர், ஆசிரியர்களையும் பாடசாலைச் சமூகம் நன்றியுடன் வாழ்த்துகின்றது.*

(30275)(21-14-26) ~ பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.



## கண்ணீர் அஞ்சலி



யாழ்.பிரதேச செயலகத்தின் சிறாம்பியடி (ஜே/79) பிரிவு கிராம உத்தியோகத்தர்

**சொக்கலிங்கம் பாலச்சந்திரன்**

அவர்கள் அகால மரணமானதையிட்டு ஆறாத்துயரில் இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச்சங்கம்
யாழ்.பிரதேச செயலகம்.

- பிரதேச செயலாளரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.

(30271)(38-14-26)



## யுத்தம் வேண்டாம்!

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வேண்டும்!!

தமிழ்த் தேசிய இனத்தின்
- தாயகம்
- தேசியம்
- சுயநிர்ணய உரிமை

ஆகிய மூன்று கோரிக்கைகளையும் நிலைநாட்டுவோம்.



யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள்

திரு.ந.ஸ்ரீகாந்தா




திரு.எம்.கே.சிவாஜிலிங்கம்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)




ஆகியோர் வெற்றிபெற வாழ்த்துகிறோம்

ஆனைக்கோட்டை, உயரப்புலம் வாழ் மக்கள்.




## நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் 2004



# கி.சிவநேசன்

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம்.

தமிழ்த்தேசியம் பலம் பெறவும் உழைக்கும் வர்க்கத்தின் பெருமை ஓங்கவும் உழைத்த இவரை அதிகப்படியான வாக்குகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் தெரிவுசெய்வோம்.



- கூட்டுறவாளர்களும் பொதுமக்களும் -

தமிழ் இனத்தின் அரசியல் பலத்தைத் தீர்மானிக்கின்ற தேர்தல்

இளம் தலைவன். சலுகைகளுக்கு விலைபோகாதவன்.
எம் இனத்தின் விடுதலைக்கு வலுச்சேர்க்கும் உன்னத இலட்சியவாதி

# செல்வராசா கஜேந்திரன்

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர், யாழ்.மாவட்டம்)

வீட்டுக்கு நேரேயும் பத்தாவது இலக்கத்துக்கு மேலேயும் புள்ளடிகளை இட்டு



★ எமது போராட்டம் உரிமைக்கான போராட்டம் என்பதை சர்வதேச உலகிற்கு உணர்த்தவும்
மக்களின் இனப்பிரச்சினையை உண்மைத்தன்மையோடு எடுத்துரைக்கவும் -

**உண்மைக்கும் நேர்மைக்கும் இலட்சியப் பற்றுக்கும் வாக்களித்து
தமிழின விடுதலைக்குப் பலம் சேர்ப்போம்.**

★ தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள்.

★ தமிழ் மக்களின் அபிலாசை எமது மரபுவழித் தாயகத்தில் ஒரு தேசிய
இனமாக சுயநிர்ணய உரிமையுடனான வாழ்வு. இதுவே எமது அரசியல் இலக்கு.

- குடாநாட்டு மக்கள்.

| இலங்கைத் தமிழரசுக் கட்சி | வீடு | X | 10 |
|---|---|---|---|


அடக்கி ஒடுக்கப்படும் எம்மினத்திற்கு
அரசியல் நீதி கோரிய காரணத்தால்
சிங்களச் சிறைகளில் சிக்கிக் கிடக்கும்
எம் உடன் பிறப்புக்கள் பலருக்காக......




# ஸ்ரீலங்கா நீதிமன்றங்களில்

சட்ட நீதி கோரி
ஆக்ரோஷமாக
ஒலித்துக் கொண்டிருக்கும் குரல்
ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்திலும்
எம்மினத்தின் உணர்வலைகளை
உறுதியுடன் எதிரொலிக்கட்டும்!


# நினைவிருக்கட்டும்
# இலக்கம் 2
# வீட்டுச் சின்னத்தில்
# சிறீகாந்தா






X 2

# கொள்கைக்கான தேர்தல் – 2004



செல்வராஜா கஜேந்திரன்
(முன்னாள் பல்கலைக்கழக மாணவ ஒன்றிய தலைவரும், முன்னைய சர்வதேச மாணவர் பேரவைத் தலைவரும்)

யாழ்ப்பாண திறந்தவெளிச் சிறைச்சாலைக்குள் நின்று தமிழ் மக்களின் அபிலாசைகளுக்காக, இராணுவ, தேசவிரோத அடாவடித் தனங்கள், அட்டூழியங்களுக்கு எதிராகக் குரல் கொடுத்த -

பொங்குதமிழன், மாணவர் தலைவன், அடக்குமுறைக்கு எதிரான குரல் -

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராக உங்களின், எங்களின் பிரதிநிதியாக தேர்தலில் நிற்கின்றார்.

இந்த மானத்தமிழன், அடங்காத் தமிழனின் குரல் கடந்த காலங்களில் மக்களுக்காக தமிழீழத்தில் ஒலித்து வந்தது போல் இந்தக் குரல் சர்வதேச ரீதியில் ஒலிக்கவேண்டும். அதற்காக


வீட்டுக்கு நேராகவும் பத்தாவது இலக்கத்துக்கு மேலேயும் புள்ளடிகளை இட்டு-

அதிபெரும்பான்மை விருப்பு வாக்குகளால் இவனை நாடாளுமன்றம் அனுப்புமாறு கனடாவில் வாழும் உங்களின் தொப்புள் கொடி உறவுகள் ஆகிய நாம் வேண்டி நிற்கின்றோம்.

மாணவர் சக்தி மாபெரும் சக்தி என்பதை மீண்டும் உலகுக்கு உணர்த்துவோம்.

கஜேந்திரனை நாடாளுமன்றம் அனுப்புவதன் மூலம் நாம் எல்லாம் நிமிர்ந்து நிற்போம்.

## கஜேந்திரன்



X 10

றயசன் பல்கலைக்கழக தமிழ் மாணவர் மன்றம்
ரொறொன்ரோ, கனடா.
TAMIL STUDENTS ASSOCIATION
RYERSON UNIVERSITY, TORONTO, CANADA.

# பொதுத் தேர்தல் – 2004 – 04 – 02

## வாக்காளர்களுக்கொரு வேண்டுகோள்

இத்தேர்தல் தமிழ்த்தேசிய இனத்தைப்பொறுத்தவரை மிக முக்கியமானதாகும். அதனாலும் உங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துமாறு வேண்டி நிற்கின்றோம்.

ஒவ்வொரு வாக்காளருக்கும் வாக்காளர் அட்டை தேர்தல் அலுவலகத்தினால் அஞ்சலில் அனுப்பப்பட்டிருக்கும். கிடைக்காதவர்கள் உடனடியாக தங்களின் அஞ்சல் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளுங்கள். உங்கள் வாக்காளர் அட்டைகளை வேறுயாரும் களவாடித்து தவறாகப் பயன்படுத்த அனுமதியாதீர்கள்.

வாக்காளர் அட்டை கிடைக்காத விடத்து வாக்காளர் இடாப்பிலிருந்து உங்கள் பெயர், தொடர் இலக்கம் என்பவற்றை உங்கள் பகுதி எங்கள் வேட்பாளர்களிடமிருந்து பெற்று வாக்களிக்கலாம். உங்கள் வாக்குரிமையை எவரும் மறுக்கமுடியாது, ஆனால் வாக்களிக்கும் நேரம் தொடங்கியதும் வாக்களிக்க ஆயத்தமாயிருங்கள், வாக்களியுங்கள்.

1. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் "வீடு" சின்னத்திற்குப் பக்கத்திலுள்ள சதுரக் கூட்டிற்குள் X புள்ளடியிடுங்கள்.
2. அதன்பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களில் விருப்பமான மூவரைத் தெரிவு செய்வதற்கு அவரவர் இலக்கங்களுக்கு மேலே X புள்ளடியிடுங்கள். வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்தால் மட்டுமே நீங்கள் வழங்கும் விருப்புவாக்குகளும் செல்லுபடியாகும். உங்களுக்கு உரிய விருப்புவாக்குகளை மூவருக்கு மட்டுமே பாவிக்கலாம். மூவர் இலக்கங்களுக்கு மேலே புள்ளடியிடவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| சுரேஸ் பிரேமச்சந்திரன் | 01 | ந.ஸ்ரீகாந்தா | 02 |
| எம்.கே.சிவாஜிலிங்கம் | 03 | கி.சிவநேசன் | 04 |
| பொ.கஜேந்திரகுமார் | 05 | ந.ரவிராஜ் | 06 |
| பத்மினிசிதம்பரநாதன் | 07 | சி.சிவமகாராசா | 08 |
| சீ.வீ.கே.சிவஞானம் | 09 | செ.கஜேந்திரன் | 10 |
| சொலமன் சூ.சிறில் | 11 | சோமசுந்தரம் சேனாதிராசா (மாவை) | 12 |

சின்னம் | இலங்கைத் தமிழரசுக் கட்சி |  | X

விருப்பு வாக்கு இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | | |

மாவை சோ. சேனாதிராசா - பொதுச் செயலாளர் - இலங்கை தமிழரசுக் கட்சி.

தேர்தலில் வாக்களிக்கப் போகும் யாழ்ப்பாண மக்களே! எமது மாணவர்களே!
பெற்றோர்களே! கல்வியாளர்களே! ஆசிரியர்களே! அறிஞர்களே! உழைப்பாளிகளே!

எங்கள் புள்ளடிகளை வீட்டிற்கு நேரே போட்டு கூட்டமைப்பை வலுப்படுத்துவோம்!




வீட்டுக்கு நேரே புள்ளடியைப் போட்டு மேலேயுள்ள விரும்பிய
மூன்று வேட்பாளர்களின் இலக்கங்களின் மீது புள்ளடியிடுங்கள்.

யாழ். மாவட்ட தனியார் கல்வி நிறுவன
இயக்குநர்கள், ஆசிரியர்கள்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்
இலக்கம் 3 இற்கே உங்கள் புள்ளடி
எம்.கே. சிவாஜிலிங்கம்



ஒரு செயல் வீரர்
நிறையச் சாதித்தவர்.
அஞ்சா நெஞ்சர்.
எமது நகர்வுகளுக்கு
மூலதனமானவர்.
முக்காற்பங்கு
வெற்றிக்கு வழிசமைத்தவர்.
தன்னை இழந்து
பணிசெய்பவர்.
யாருக்கும் கைப்பொம்மையாகாதவர்.
நீங்கள் எழுச்சிகொண்டபோது
உங்கள் அருகிருந்தவர்.
உங்களுக்கும் நிச்சயம் உதவுவார்.
அவரை வெற்றி பெறச் செய்வோம்.

உறுதியுடன் இணைந்து நிற்கும்
வடக்குக் கிழக்கு மாகாணப்
பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 28 - 06 - 1926 |  | 01 - 03 - 2004 |

### அமரர் கந்தையா ஆறுமுகம் (கிளாக்கர்)

அமரத்துவமடைந்த எமது அன்புத்தெய்வத்தின் வீட்டுக் கிருதிய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (31.03.2004) புதன்கிழமை காலை 6 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்துகொள்வதுடன், அதன் பின்பு தொடர்ந்து நடைபெறவிருக்கும் மதியபோசன நிகழ்விலும பங்கேற்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புக்குரியவர் மறைந்த துயரச் செய்திகேட்டு உடன்வந்து உதவியோர், கண்ணீர் அஞ்சலிப்பிரசுரங்கள் விநியோகித்தோர், தொலைபேசி, தந்திமூலம் அனுதாபச்செய்தி அனுப்பியோர், ஆறுதலும் தேறுதலும் கூறிய அன்பானவர்கள் அனைவருக்கும் வேறும் பல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்தோருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்நத நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிள்ளைகள்:
ஆ.இரவீந்திரன்-(லண்டன)
ஆ.சபேசன்-(சுவிஸ)
திருமதி பிரபா பாஸ்கரன்-(சுவிஸ்)

குளவியடி அம்மன் கோவில்,
நவிண்டில், கரவெட்டி.
(34158) (12-17)

# மரண அறிவித்தல்
## திருமதி மங்கையற்கரசி நடராசா



மார்க்கம்புரை, கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மங்கையற்கரசி நடராசா (29.03.2004) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் செல்லையா - நடராசா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - அம்மாக் குட்டி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற ஞானாம்பிகை, நவரத்தினம் அவர்களின் அருமைச் சகோதரியும கஜலட்சுமி (கணக்காளர்-JSAC), சிவலோகநாதன் (கனடா), சிவலோகராஜன், கஜரூபி, நிருசாராணி (வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவமணி, கலையரசி (ஜேர்மனி), வரலட்சுமி (கனடா), சிவநேசன் (ஜேர்மனி) ஆகியோரின் சிறிய தாயாரும் கந்தசாமி (அதிபர்,குட்டியாப்புலம் மகாவித்தியாலயம்), பரமேஸ்வரன் (ஜேர்மனி), தங்கராஜா (கனடா), நிலானி (ஜேர்மனி), பிரபாகரன் (ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), கபிலன் ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் கந்தன்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மார்க்கம்புரை,
கோப்பாய் வடக்கு. (C-34163)(12-17)
தகவல்:
செ.நடராசா (கணவர்)

### நவமி உற்சவம்

வடமராட்சி,மார்ச்30

வடமராட்சி, ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவிலில் இராம நவமி உறசவம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும். இவ்வுற்சவத்தில் சிறப்பு நிகழவாக யாழ்.பல்கலைக் கழகத் தமிழ்த துறைத் தலைவர் பேராசிரியர் அசண்முகதாஸ், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெறும்.

(ஒ-173)

O/L DAY CLASS
ஆரம்பம் : 05-04-2004
திங்கள் - 9 மணி
தமிழ், சமயம்,
S.K. கிருபாகரன் B.A
மது கல்வி நிறுவனம்
டச்சு வீதி, இருபாலை, கோப்பாய்.
(30287) (40)

O/L
PAPER CLASS
SCIENCE :
ஆசிரியர்: திரு.சி.தயாபரன்
பாடசாலை மாணவர்களுக்கு விடுமுறைக்கால
COMPUTER
BASIC CLASSES
கட்டணம் ரூபா 500/= மட்டுமே!
புதிய பிரிவு
ஆரம்பம் : 05. 04. 2004
காலை 8.00 மணி (ப. நே.)
HERO ACADEMY
மீசாலை மேற்கு, மீசாலை.
(30286) (40)

லிபேட்டி அச்சுவேலி



இன்று முதல்
தனுஷ், அபர்ணா
நடித்த
அரவிந்தன்
(ரீகல்)
காட்சிநேரம் : 3.00, 7.00 (ப.நே.)
(C-33771)(12)

நிறைஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன், குஷ்பூ நடித்த
சேவகன் (ரீகல்)
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (ப.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
CHICKEN-RUN
(C33770) (12)

ராஜா யாழ்ப்பாணம்
வசீகரன்
பூஜா
நடித்த
காட்சி நேரம்:
10.30, 2.30,
6.30, 9.30
(ப.நே.)



(C/33515) (12)

நாகம்ஸ் சுன்னாகம்
நாளை முதல்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
விஜய், சிம்ரன், விவேக்,
தலைவாசல் விஜய் மற்றும் பலர் நடித்த
A.R.ரஹ்மானின் இசையில்....
உதயா
தினசரிகாட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00(புதிய நேரம்.)

சரத்குமார்,லைலா,வடிவேல்
நடித்த கம்பீரம்




பதிவுகளுக்கு:
நட்ணம்ஸ் பாட்டா
கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

நாகம்ஸ் பாட்டா
சுன்னாகம்.
நாகம்ஸ் சினிமா.
(C-33842) (12)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மாரிமுத்து சிவஞானவதி



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாரிமுத்து சிவஞானவதி அவர்கள், தற்பொழுது உரும்பிராய் வடக்கில் உள்ள இல்லத்தில் 28.03.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா அன்னமுத்துவின் அன்பு மகளும் காலஞ்சென்ற மாரிமுத்து (இளைப்பாறிய Railway உத்தியோகத்தர், மலேசியா) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் (மலேசியா), செல்வநாயகம் (மலேசியா), அரியநாயகம் (மலேசியா), தனேஸ்வரி (சிங்கப்பூர்), பரமேஸ்வரி (மலேசியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஜெகதீஸ்வரி (மலேசியா) அவர்களின் சகோதரியும் இரத்தினாவதி, யோகாமபிகை, பராசக்தி, சற்குணவதி (கனடா), சிவனேசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் மகேஸ்வரன் (C.W.E) இளைப்பாறிய உத்தியோகத்தர்), பஞ்சரத்தினம் (CTB) இளைப்பாறிய உத்தியோகத்தர்), சிவனேசதுரை (உள்ளூராட்சித் திணைக்கள அலுவல்கள்), குலசிங்கம் (கனடா), சுலோஜனா (கனடா) ஆகியோரின் மாமியாரும் ரோகன், யசோதா, சுஜதா, சுகந்தா, திலீபன், கலைமகள், பிரியா, பானு, வேணி, கோகிலன், ஜெனித்தா, சுஜித்தா, ஜெனுர்ஷன், லோர்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சஞ்ஜித், தர்சிகன், பிறனேஷ், அஸ்வினி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2004) புதன்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் இருளன் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (30277)(38-12-17)
தகவல்:
குடும்பத்தினர்.

## ஆறுமுகம் கனகலிங்கம்

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கனகலிங்கம் அவர்கள் 28.03.2004 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் செல்லம்மாவின் (கனடா) அன்புக் கணவரும் புவனேந்திரன் (கனடா), குமுதினி (கனடா), அகிலா (கனடா), நந்தகோபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவானந்தராஜா (கனடா) அவர்களின் அனபு மாமனாரும் லகினா (கனடா), நிசாந் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.04.2004 சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். துக்கநிகழ்வு தொல்புரத்தில் அனுட்டிக்கப்படும்.

தொல்புரம் மத்தி,
சுழிபுரம். (30280)(12-17)
தகவல்
பொ.சிற்றம்பலம் (மாமனார்).

## சொக்கலிங்கம் பாலச்சந்திரன்

(கிராமசேவையாளர் J/79 சிறாம்பியடி யாழ். வீதி, யாழ்ப்பாணம்)



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் இல. 13, யாழ். வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சொக்கலிங்கம் பாலச்சந்திரன் அவர்கள் 28.03.2004 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சொக்கலிங்கம் (முன்னாள் கங்காணி வைத்தியசாலை) - கண்மணி ஆகியோரின் புதல்வனும் சின்னத்துரை (ஆசிரியர்) - வள்ளியம்மை தம்பதிகளின் மருமகனும இராஜராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் பிரசன்னா (விவசாயத் திணைக்களம், திருகோணமலை), காலஞ்சென்ற பிரசாத் (2 ஆம் லெப்டினட் - கபிலன்) மற்றும் பிரதாப், பிரதீப் (மாணவன் - யாழ்மத்திய கல்லூரி), சோபிகா (மாணவி - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் மங்களேஸ்வரி (சுவிஸ்), குலேந்திரன் (சுவிஸ்), புவனேந் திரன் (லண்டன்), பஞ்சகௌரி (கிராம சேவையாளர், பாண்டியன்குளம்), சாந்தினி (லண்டன்), சுசீந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் புவனராஜேஸ்வரி (மேல்நீதிமன்றம் வவுனியா), நகுலராஜேஸ்வரி (லண்டன்), கேதீஸ்வரராஜா (N.S.K.தொலைத்தொடர்பகம் - திருகோணமலை), குருபரராஜா (P.D.P. - யாழ்ப்பாணம்), பாலராஜேஸ்வரி (ஜேர்மனி), மங்களராஜேஸ்வரி (ஆசிரியை,விக்னேஸ்வராவித்தியாலயம், நல்லூர்), சக்தீஸ்வரராஜா (லண்டன்) மற்றும் சந்திரலிங்கம் (சுவிஸ்), நகுலேஸ்வரி (சுவிஸ்), கலாவதி (லண்டன்), புவனேந்திரராஜா (அம்மன் பல்பொருள் வாணிபம் - பாண்டியன்குளம்), ரஜனி ஆகியோரின மைத்துனரும் காலஞ்சென்ற உமாசரன் மற்றும் விஜயகுமார் (லண்டன்), றதிகலா, துஷியந்தி (வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்), நித்தியராசா (ஜேர்மனி), கருணானந்தன (முகாமையாளர் ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2004) செவ்வாய்க்கிழமை பகல் 11 மணியளவில் இல. 31, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, கச்சேரியடி இல்லத்தில் நடைபெற்றுப் பின்னர் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை, துண்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.31, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.
T.P: 0777 777981, 0777 570232
தகவல்:
பா.பிரதாப் (மகன்).
(30292) (12-17)

# முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் அக்கரைப்பற்றில் நேற்றுக்கைது!

கொழும்பு,மார்ச்30

முஸலிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் என்று கூறப்படும் 26 பேர் அக்கரைப்பற்று பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலீஸாருக்குக் கிடைத்த தகவலொன்றை அடுத்து நேற்று அதிகாலை 1.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பையடுத்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.'

நேற்று முன்தினம் அப்பகுதியில் இடம்பெற்ற தேர்தல் வன்முறை சம்பவமொன்றையடுத்து வீடொன்றை பொலீஸார் சுற்றிவளைத்தனர். அநத வட்டிலிருந்து உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பெற்றோல் குண்டு, கத்தி, பொல்லு, இரும்புக் கம்பிகள் போன்றவற்றைத் தாம் கைப்பற்றினர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட 26 பேரையும் முஸ்லிம் காங்கிரஸின் தீவிர ஆதரவாளர்கள் என்று அக்கரைப்பற்று பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட அனைவருக்கும் எதிராக தேர்தல் சட்டங்களுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மஜிஸ்ரேட் நீதிமன்றில் கைது செய்யப்பட்ட அனைவரும் நேற்று அக்கரைப்பற்று மஜிஸ்ரேட் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவிருந்தனர். (க)

# 'நுஆ' தலைமையகம் மீது தாக்குதல் ஆதரவாளர் வீட்டுக்கு கிரனைட் வீச்சு!

சாய்ந்தமருது,மார்ச்30

சாய்ந்தமருது 'நுஆ' தலைமையகம் மற்றும் 'நுஆ' ஆதரவாளர் வீடு என்பன நேற்று அதிகாலை தாக்குதலுக்கு இலக்காகின என்று கல்முனைப் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற தாக்குதலில் அலுவலகமும் வீடும் சேதமடைந்துள்ளன. 'நுஆ' ஆதரவாளரும் கணிதபாட ஆசிரிய ஆலோசகருமான ஏ.அகமட்லெவ்வை கடந்த 15 ஆம் திகதி தனது கல்விக் கூடத் திறப்பு விழாவிற்கு 'நுஆ' தலைவி பேரியல் அஷ்ரப்பை அழைத்திருந்தார். அவரும் வந்து உரையாற்றினார். சம்பவங்களுக்கு இதுவே காரணமாக இருக்கலாம் என்று கல்முனைப் பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் :-

தனது வீட்டுக்கு எறிந்த கிரனேட்டால் கூரை சேதமடைந்ததுடன் குடும்பத்தினர் சஞ்சலமடைந்தனர். தான் அத்தருணம் கழிவகத்தில் இருந்தனால் தப்பித்தேன். எனது படுக்கையின் மேல் கிரனேட் வீழ்ந்துள்ளது. அங்கு இருந்திருந்தால் எதிரியின் இலக்கு வெற்றியளித்திருக்கும் என்றார்.

கல்முனைப் பொலீஸார் உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டனர். (க)

## இணையத்தளத்தில் ஒரு வேண்டுகோள்

பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்கும்படி புலம்பெயர்ந்த தமிழர்கள் இணையத்தளம் ஊடாகவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

'புலம்பெயர்ந்த உறவுகளுக்கு ஒரு வேண்டுகோள்!' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இனி எமது ஈழம் ஜப்பானாக மாறப்போகிறதா? இல்லை சுடுகாட்டுச் சாம்பல்மேடாக மாறப்போகிறதா? என்பதைத் தீர்மானிக்கும் வரலாற்றுக் காலகட்டத்தில் நாம் நிற்கின்றோம்.

அதன் முதற்படியாக நாம் எமது இன உறுதியினையும் நாட்டுப் பற்றையும் காட்டும் அரிய சந்தர்ப்பமாக அமைந்துள்ளது வரும் பொதுத்தேர்தல். சில தேசவிரோத சக்திகள் அந்நிய மற்றும் சிங்களக் கைக்கூலிகளாக மாறித் தமிழர் ஒற்றுமையைச் சிதைக்க கங்கணம்கட்டி நிற்கின்றன.

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் ஒன்றுதான். ஈழத்தில் வாழ் கின்ற எம் உறவுகளைத் தொலைபேசியில் அழைத்து அவர்களைத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு வாக்களிக்கும்படி கூறுங்கள். நீங்கள் செய்யப்போகும் இந்த அளப்பரிய சேவை இனிவரும் எமது ஈழச்சந்ததிக்கு நீங்கள் அமைக்கப்போகும் ஏணிப்படியாகும் என்றுள்ளது. (ஒ-10)

## மகேஸ்வரனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளன. விசாரணைகளில் திருப்பங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் துப்பாக்கிதாரி இனித் தப்பமுடியாது; அவர் விரைவில் கைதுசெய்யப்படலாம் என்றும் பொலீஸ் அதிகாரி ஓூகொட நம்பிக்கை தெரிவித்தார்.

வேட்பாளர் மகேஸ்வரனைக் கொலைசெய்வதற்கு அவர் பங்குபற்றிய பல கூட்டங்களில் முன்னேற்பாடாக ஒத்திகை பார்க்கப்பட்டதாகவும் பொலீஸாருக்குத் தெரியவந்திருக்கிறது. அதையடுத்து வீடியோ பதிவுகள், புகைப்படப் பதிவுகள் போன்றவற்றைக் கொண்டு இரகசிப் பொலீஸார் விசாரணை செய்துவருகின்றனர். (க)

# சட்டவிரோத வலைகளுக்கு எதிராக மீனவர் போராட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோதமான வலைகளைக் கொண்டு மீன்பிடிப்பதைக் கண்டித்து மட்டகளப்பு புதுமுகத்துவாரத்தில் மீனவர்கள் வார இறுதியில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தடை செய்யப்பட் டிஸ்கோ வலை, தட்டுவலை, தங்கூசி வலை, முதலான வற்றைக் கொண்டு மீன் பிடிப்பதால் இம்மாவட்டத்தில் வாவி மீன்பிடித் தொழிலை நம்பியுள்ள 17ஆயிரம் மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மீனவர் கூட்டுறவுச் சமாசத்தினால் கைப்பற்றப்பட்ட தடை செய்யப்பட்ட பொருந்தொகையான வலைகள் மீனவர்களினால் தீயிட்டு எரிக்கப்பட்டன.

புதுமுகத்துவார வாவியோரம் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் மற்றும் தடை செய்யப்பட்ட வலைகள் எரிப்புச் சம்பவங்களில் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சமாசத் தலைவர் எஸ். பாலசுப்பிரமணியம் மற்றும் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (க)

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி நிறுவனங்களை கண்காணிக்கும் அதிகாரமுடைய அலுவலராக டபிள்யூ.டி.எல். பெரேரா என்பவர் தேர்தல் ஆணையாளரால் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

எனினும், தேர்தலுக்கு இன்னும் மூன்று நாள்கள் மட்டுமே இருக்கும் சமயத்திலே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதுவரை அரச ஊடகங்கள் பக்கச்சார்பாக நடக்க அனுமதிதது்விட்டு இப்போது நடவடிக்கை எடுத்திருப்பது காலம்தாழ்திய செயற்பாடு என்று சில ஆய்வாளர்கள் கருத்துக் கூறியுள்ளனர்.

தேர்தல் ஆணையாளரின் இந்த முடிவு அதிர்ச்சி தரும் நடவடிக்கை என ரூபவாகினின் கூட்டுத்தாபனத்தின் தலைவரும், ஜனாதிபதியின் பேச்சாளருமான ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையாளரின் இந்த நடவடிக்கைக்கு எதிராகத் தாங்கள் நீதிமன்றத்துக்கு செல்லப்போகின்றார்கள் என்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் ஹட்சன் சமரசிங்க தெரிவித்தார். (க-9-ரி)

## வாக்காளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள், தமது அடையாளத்தை நிரூபிப்பதற்கான ஆவணம் ஒன்றுடன் தனது பிரிவிற்குரிய தபாலகத்திற்குச் சென்று தனது அல்லது தனது குடும்பத்தினது வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். வாக்காளர் அட்டைகள் ஏப்ரல் 2ஆம் திகதி பிற்பகல் 4 மணி வரை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இறுதிநேரத்தில் ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காக உடனடியா வாக்காளர்கள் தமது அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

காங்கேசன்துறை தபால் நிலையம், மருதனார்மடத்திலும், வசாவிளான் தபால் நிலையம், புத்தூர் - நவக்கிரி வீதியிலும், நாகர் கோயில் தபால் நிலையம் புலோலியிலும் இயங்கிவருகின்றன.

இதனை இடம்பெயர்ந்த மக்கள் கவனத்தில் கொள்ளவேண்டும் என்றார் அவர். (ஒ-9)


## வெளிவந்துவிட்டது

*G.C.E. A/L 2004 மாணவர்க்கான பொதுச் சாதாரண பரீட்சை வழிகாட்டி வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. நா. வன்னியசிங்கம் அவர்களின் ஆசியுடன் P.கமலதாசன் & உமாசங்கர் ஆகியோரால் எழுதப்பட்டது.*

★ கடந்த கால வினாத்தாள் விடைகளுடன்
★ மாதிரி வினாத்தாள் விடைகளுடன்
★ பயிற்சி வினாக்கள்
★ அண்மைக்கால பொது விடயம்.

கிடைக்குமிடம் : பூபால சிங்கம். ஸ்ரீலங்கா. துர்க்கா (சுன்னாகம்). சிதம்பரப்பிள்ளை (நெல்லியடி). அறிவமுது (வன்னி). கவிதா (வவுனியா).

(30293)(31-12-11)



SUBRA (14)

2006 A/L பிரிவு II

ஆரம்பம்: 05.04.2004(திங்கள்)

(C-34144) மதியம் 12. 00 மணி


## சேர் பொன் இராமநாதன் நினைவுப் பேருரை

**காலம்:** இன்று (2004.03.30) செவ்வாய்க்கிழமை பி.ப.3.00மணி

**இடம்:** யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கம்

நினைவுப்பேருரை நிகழ்த்துபவர்

**பேராசிரியர் A.V. மணிவாசகம்** அவர்கள்

B.A. (Pera), M.A. Phd (Banaras)

**தலைப்பு: Academic Research in Public Administration and Management, Demystification and Relevance**

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

யாழ்.பல்கலைக்கழகம். **துணைவேந்தர்.**

(C/34162)(40-11-12)


**Sky Computer Systems**

109, Kandy Road,
Chundikuli, Jaffna.
Tel/Fax No. 021-4590325
(கச்சேரிக்கு அருகில்)

MS Office, Photoshop, Page Maker, Corel DRAW, Hardware, AutoCAD, Internet & E-mail, Computerised Accounting Packages, Visual Basic, C/C++ Programming.

Note:
★ மாணவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியான முறையில் கவனிக்கபடும்.
★ உங்களுக்கு வசதியான நேரத்தை தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்.
★ சான்றிதழ்கள் யாவும் கொழும்பு தலைமைக் காரியாலயத்திலிருந்து பெற்றுத்தரப்படும்.

(30041)

E.mail: skycom@wow.lk
Today you learn
Tomorrow you Lead.



இன்று மாலை ஆரம்பமாகிறது

மனிதம் எமதுபாடல்

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் தவக்கால ஆற்றுகை

மனிதம் எமது தேடல்

# காவிய நாயகன்

மன்ற அரங்கில்

திருப்பாடுகளின் காட்சி

மாலை 7.00 மணி

மார்ச் 30,31, ஏப்ரல் 01, 03, 04 – 2004
செவ்வாய், புதன், வியாழன், சனி, ஞாயிறு
(5 நாள்களுக்கு)

பார்வையாளர்கள் ஆசனங்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.
அன்பளிப்பு: 30. 00

மனிதத்துவத்தின் தேடலுக்கான கல்வாரிப் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

238. பிரதான வீதி யாழ்ப்பாணம்
T.P/fax 021-222 2393
E-mail: cpajaffna @ sltnet.lk
Website: www.cpateam.org.

-திருமறைக் கலாமன்றம்.

(C/33809)(40-12-11)


## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பனும் யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவருமான பிரசன்னா, பிரதாப ஆகியோரின் பாசமிகு தந்தையார்

**சொக்கலிங்கம் பாலச்சந்திரன்**

(G.S-J/79 சிறாம்பியடி)

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர்கள்,
யாழ்.மத்திய கல்லூரி.

யாழ்ப்பாணம். (30297)(12-11)

## மரண அறிவித்தல்கள்

### தம்பிஐயா சீவரத்தினம்



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா சீவரத்தினம் அவர்கள் 29.03.2004 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா-தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - கமலாம்பிகை தம்பதிகளின் பாசமிகு மருமகனும் சத்தியதேவியின் அன்புக் கணவரும் தேவகி (ஜேர்மன்), ரவிக்குமார் (பிரான்ஸ்), சசிகலா (பிரான்ஸ்), சசிகுமார் (லண்டன்), நிறைஞ்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சண்முகராசா (ஜேர்மன்), வதனா (பிரான்ஸ்), யதோசன் (பிரான்ஸ்), றஜனிகா (லண்டன்), றோகினி ஆகியோரின் அன்பு மாமனாரும் துஸ்யந்தன், கார்த்தீபன், துவீசன், சதீசன், சர்மிளா, ஜென்ஷியா, டிசானா, டிலக்ஷன், தமிழ்வர்ஸன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் விமலாதேவி, காலஞ் சென்றவர்களான சிவராசா, பாலசிங்கம், குணராசா மற்றும் பத்மாவதி, அன்னலிங்கம், ஈஸ்வரி ஆகியோரின் சகோதரரும் கார்த்திகேசு, அன்னலட்சுமி, புனிதவதி, புனிதம், தர்மலிங்கம், பாக்கியம், பூபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2004) செவ்வாய்க்கிழமை பி.ப. 1 மணியவில் நாவற்குழியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காகப் பூதவுடல் நாற்குழி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சீ.நிறஞ்சன் (மகன்).

நாவற்குழி,
கைதடி, (30294)(12-11)

### பண்ணாகம் இரத்தினசிங்கம் பரமேஸ்வரன் ஜெயகணேஷ் (ஜெகன்)



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பரமேஸ்வரன் ஜெயகணேஷ் அவர்கள் நேற்று 29.03.2004 அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் இரத்தினசிங்கம் பரமேஸ்வரன்- நிர்மலாதேவி ஆகியோரின் ஏகபுத்திரனும் செல்வி ஜெயஸ்ரீயின் அன்புத் தம்பியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2004) செவ்வாய்க்கிழமை பி.ப. 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச.சதானந்தன் (கோபி -மைத்துனர்).

பண்ணாகம்
சுழிபுரம் (30297)(12-11)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.03.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.